பிப்ரவரி 1990 விலை ரூ.3.

# திருக்கோயில்





அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் ஆலயத்திற்கு அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வருகை தந்து திருக்கோயில் திருப்பணி வேலைகளை ஆய்வு செய்தார். கோவை துணை ஆணையாளர் திரு. கே.கே. இராஜா எம்.ஏ.பி.எல்., உதவி ஆணையாளர் திரு. பி. பாஸ்கரன் பி.எஸ்சி, பி.எல்., செயல் அலுவலர் திரு. பி. தியாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

முகப்பு:

மயிலை
அருள்மிகு சிங்காரவேலர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 சுக்கில ஆண்டு மாசி
பிப்ரவரி 1990 விலை ரூ. 3-00 | மணி 2

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

மயிலை அருள்மிகு திருவள்ளுவர் ஆலயம்
—திருக்குறள் சி. இராமகிருட்டிணன்.

விஞ்ஞான நோக்கில் மெய்ஞ்ஞான விநாயகர் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தெய்வம்.
—பேராசிரியர் தேவ. நடராஜன்.

காஞ்சி காமாட்சி
—புலவர் ச. சோமசுந்தரம்

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை
—வித்யா தீர்த்த தாசன்

நவதிருப்பதிகள்
—ஆ. வெ. ராமானுஜம்

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்த வாரியார்.

சித்திர பாரதம்
—செவ்வேள்

ஆனந்தநடனம் ஆடினார்
—நடராசன் அடிமை.

ஆலய விளக்குகள்
—என். ஆர். இலக்குமணன்

தைப் பூசத் திருநாள்
—சீ. வசந்தி.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

ஒப்பில்லா ஒன்பது.
—இ. பரந்தாமன்.


திருமயிலைத் திருத்தலம் இலக்கிய வரலாற்றுப் பார்வை - நூல் மதிப்புரை.
—நிறைமதி

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்



**மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் கலைஞர் அவர்கள்**



கலிங்கனும் கதிரவனும் உற்ற நண்பர்கள். சில நாட்கள் பிரிந்திருந்து ஒரு நாள் சந்தித்தனர். ஊர்க் கதைகள் சிலவற்றைப் பேசினர்.


கதிரவன், கலிங்கனிடம் மெத்த ஆர்வத்துடன் ''நண்பா, இப்போது உன்கோபமெல்லாம் எப்படியிருக்கிறது? இன்னும் சினம் கொண்டு சீறி விழுந்தபடிதான் இருக்கிறாயா? தென்றல் என மாறித் திருந்திவிட்டாயா?''

கதிரவனின் கேலிக்குக் கலிங்கன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்.

''அன்புத் தோழனே! நீ வியப்படைகிற அளவுக்கு என்னிடத்திலே மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நான் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன் கேள். நேற்று நடந்த நிகழ்ச்சிதான். கேட்டால் நீ என்னைப் பாராட்டுவாய்''.

''அப்படி என்ன அற்புத நிகழ்ச்சி. அதையும் தான் சொல்லேன் கேட்கிறேன்.''

''நேற்றுப் பாசறைப் பயிற்சி முகாமில் உட்கார்ந்திருந்தேன். என்னுடன் போர் வீரர்கள் பலரும் அமர்ந்திருந்தார்கள். அப்போது தளபதி அந்தப் பக்கம் வந்திருக்கிறார். நான் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அவர் வருவதைக் கண்ட மற்ற வீரர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவர் அருகே வந்த பிறகுதான் எனக்குத் தெரிந்தது. நான் எழுந்து நின்று வணக்கம் செலுத்துவதற்குள் தளபதி என்னிடமே வந்து விட்டார். என் கையில் கண்ணாடிப் பாத்திரம் ஒன்று இருந்தது. அப்போதுதான் தண்ணீர் குடித்து விட்டு அந்தப் பாத்திரத்தைக் கையில் வைத்திருந்தேன். கண் இமைப்பதற்குள் தளபதியின் முரட்டுக்கால் அந்தக் கண்ணாடிப் பாத்திரத்தை உதைத்துக் கீழே உருட்டியது. பாத்திரம் சிதறியது. பதறிப்போய் எழுந்தேன். முகத்தில் காரிதுப்பிவிட்டுப் போய்விட்டார். நான் அமைதியாக நின்றேன். சரி, சினம் காக்க வேண்டும். அதுவே சிறந்தது என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். நண்பர் என் கையில் இருந்த பாத்திரத்தைக் காலால் உதைத்தமைக்கும் என் முகத்தில் காரிஉமிழ்ந்தமைக்கும் எனக்குக் கோபம் மட்டும் வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? என் தலைக்கே ஆபத்து வந்திருக்கும் அந்தத் தளபதியால். என் இன்னுயிர்த் தோழனே! இப்போது சொல்; நான் சினம் காப்பவன் ஆகிவிட்டேனா இல்லையா?''



கலிங்கன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த கதிரவன் பதில் சொன்னான்.

''கலிங்கா! நேற்று நடந்ததைச் சொன்னாய் இப்போது. இரண்டு கிழமைக்கு முன் நடந்தது நினைவிருக்கிறதா? நான் உன் இல்லத்துக்கு வந்திருந்தேன். வெயிலில் திரிந்து வந்த காரணத்தால் வந்ததும் வராததுமாக வேட்கை மிகுதியால் தண்ணீர் கேட்டேன். நீ உன் தம்பியைக் கூப்பிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னாய். அவன் ஓடோடிச் சென்று ஒரு கண்ணாடிக் குவளையில் நீர் கொண்டு வந்தான். வந்த அவசரத்தில் குவளையைக் கீழே போட்டுவிட்டான். கண்ணாடிக் குவளை நொறுங்கிச் சிதறிவிட்டது. உடனே நீ என்ன செய்தாய்? அந்த இளந்தளிரின் கன்னங்களில் உன்கைகள் விளையாடின. அவன் ''ஐய்யோ! அம்மா'' என்று அலறிக்கொண்டே உள்ளே ஓடினான். "ஏனப்பா இப்படி அவன் கன்னம் வீங்கும்படி அடித்தாய்'' எனக் கேட்டுக்கொண்டே வந்தார்கள் உன் தாயார்.

அப்போது நீ என்ன பதில் சொன்னாய். ''சே சும்மாகிட! பிள்ளைக்கு வாதாட வந்து விட்டாயா? மரியாதையாக உள்ளே போ'' இது நீ உன் தாயாரிடத்திலே காட்டிய கோபம். கலிங்கா! நான் ஏன் அதை நினைவுபடுத்துகிறேன் புரிகிறதா! தளபதி காலால் உதைத்துக் காரி உமிழ்ந்தபோது சினத்தை அடக்கிக் கொண்டது போற்றத் தக்கதல்ல! காரணம், அங்கே உன் சினம் செல்லாது. இதனால் அந்தச் சினத்தை அடக்கினால் என்ன, அடக்காவிட்டால் என்ன? நீ சினத்தை அடக்கியிருக்க வேண்டிய இடம் உன் தம்பியிடமும் தாயிடமும்.

''இதைத்தானப்பா வள்ளுவர் கூறுகிறார், நம் சினம் பலிக்குமிடத்தில் அதனை அடக்க வேண்டும். சினம் பலிக்காத இடத்தில் அடக்கினால் என்ன, அடக்காவிட்டால் என்ன? சினம் செல்லுபடியாகும் இடத்தில் அடக்குவதே சிறப்புக்குரியதாகும்.

கதிரவன் மேற்கோள் காட்டிய குறளைக் கேட்டுக் கலிங்கன் தலை குனிந்து கொண்டான்.

''செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
அல்லிடத்துக்
காக்கின் என் காவாக்கால் என்?''

**—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக் கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப் படுகிறது.**

# மயிலை அருள்மிகு திருவள்ளுவர் ஆலயம்

**திருக்குறள் இராமகிருட்டிணன்**

**(ஓய்வுபெற்ற நீதிபதி)**



**திருமயிலை ஆலயத்தில் உள்ள அருள்மிகு வள்ளுவர்**

அண்மையில் அமெரிக்க மண்ணலிருந்து ஒரு செய்தி கிடைத்தது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த பிறகு தாங்கள் விரும்புகிறபடி ஆண்டவனைத் தொழ உரிமை மறுக்கப்படுகின்ற காரணத்தினால் புதிய அமெரிக்க நாட்டில் குடியேற உரிமை மறுக்கப்படுகின்ற காரணத்தினால் புதிய அமெரிக்க நாட்டில் குடியேற எண்ணிய சில ஆங்கிலேயர்கள் அங்குச் சென்றார்கள். அவர்கள் முதல் முதலில் அமெரிக்க மண்ணில் காலடி வைத்த இடம் ஒரு பாறையாகும். தங்களது வரலாற்றோடு பிணைந்த அந்தப் பாறையை புனிதமாகக் கருதி இன்றும் அதைப் போற்றுகின்றனர். அந்தப்பாறையின் சிதல்களைத் தங்களது வீடுகளில் வைத்து வரலாற்றுணர்வுடன் பாதுகாத்தும் வருகின்றனர் என்பதே அந்தச் செய்தியாகும். வரலாற்றில் பொன்னெழுத்துக்களைப் பொறித்துவிட்டு மறைந்த மாபெரும் முனனோரை மதிக்கின்றனர்., தமது நெஞ்சத்தில் இருத்திப் போற்றுகின்ற உணர்வை இயம்பாகவே பெற்றிருக்கின்றனர் என்பதை அறிந்து நாமும் மகிழ்கின்றோம்.

பழம்பெரும் நாகரீகம் படைத்துள்ளதாகக் கருதப்படும் நம் தமிழ்ப் பெருமக்களின் நிலை என்ன என்பதை இந்தப் பின்னணியில் ஆய்வோம்.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்துவான் புகழ்கொண்ட தமிழ்நாடு'' என்று பாரதியாரும், திருக்குறளுக்கு ஒப்பான நூல் உலகில் இதுவரையிலும் தோன்றவில்லையென எல்லா அறிஞராலும் பேசப்படும் திருக்குறளைப் படைத்த திருவள்ளுவப் பேராசானைப் பெற்றதால் தான் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றதென நாமும மிகப் பெருமையுடன் பேசுகின்றோம். அந்த மாபெரும் மனிதத் தெய்வம் வாழ்ந்ததாக எண்ணப்படும் சென்னை மயிலாப்பூரில் அவரது கோயில் உள்ளதென்பதைத் தமிழர்கள் அனைவரும் அறிந்து மனம் பூரிக்க வேண்டும்.

மயிலையில் ''திருவள்ளுவர் திருக்கோயில்'' இருக்கின்றது. கோயில் உள்ள சாலைக்கும் திருவள்ளுவர் சாலை என்பதே தற்போது பெயர். 1970 வரையிலும் கோயில் வளாகத்தில் பேராசான் சிலைக்குமேல் ஓடு போட்ட கூரைதான் இருந்தது. அப்புறம்தான் ஓடு போட்ட கூரை அகற்றப்பட்டு ஒரு சிறு நல்ல கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. ஓடுபோட்ட கூரையாக இருந்த போது அதை ஒரு சிறு வீடாகத்தான் கருத முடிந்தது. அந்தக் கூரையிருந்த இடத்தில்தான் பொய்யில் புலவர் வாழ்ந்திருக்கலாம். அந்தக் கூரை எந்தக் காலத்தில் எழுப்பப்பட்டது என்பதற்கான வரலாறு தெரியவில்லை.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

ஆனால் 1970ம் ஆண்டில் அறங்காவலராக இருந்த பெரியவர் சிவஞானம் என்ற அர்ச்சகரைச் சந்தித்து உரையாடியபோது அந்தக்கூரைவீடுநீண்ட நெடுங்காலமாக இருந்தது என்றும், கோயிலைச் சுற்றி வாழ்ந்த தமிழ்ச்சமுதாயத்தினர் கோயிலைப் பராமரித்து வந்தனர் என்றும் திருவள்ளுவப் பெருமான் அக்கோயில் இருக்கும் இடத்தில்தான் வாழ்ந்து வந்தார் என்றும் குறிப்பிட்டார்.

உலகம் போற்றும் ஒரு மாபெரும் சிந்தனையாளனாகவும், குறுகிய வைதீகக் கொள்கைகளைத் தவிர்த்துப் பல உயர்ந்த நெறிகளைத் தென்னகத்துக்கும் உலகுக்கும் அளிதத பெரும் வித்தகராகவும் விளங்கிய திருவள்ளுவர் வாழ்ந்த இடம் மயிலையாவதை பிறநாட்டினர் சிலரும் கூட அறிந்து போற்றுகின்றனர். திருவள்ளுவர் ஆலயத்தில் உள்ள வாசுகியம்மன் கோயில், சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் டாக்டர் நஞ்சுண்டராவ் என்பவரால் கட்டப்பட்டது. நஞ்சுண்டராவ் லண்டனில் இருந்த போது மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயில் தெரியுமா எனச் சிலர் கேட்டார்களாம். அவர் சென்னை திரும்பியதும் திருவள்ளுவர் கோயிலுக்கு வந்து வாசுகியம்மனுக்கும் ஒரு கோயில் கட்டினார். 1949ஆம் ஆண்டு 1950ஆம் ஆண்டு வாக்கில்



**திருமயிலை ஆலயத்தில் உள்ள அருள்மிகு வாசுகி**

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழு
பெய்யெனப் பெய்யும் மழை. [வாசு**

மூதறிஞர் இராசாசி அவர்கள்வந்து திருவள்ளுவர் கோயிலைப் பார்வையிட்டு வணங்கினார். புராதனமான கோயில் ஆனதால் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். மறைந்த தமிழக முதல்வர்கள் காமராஜர், பக்த வச்சலம் ஆகியோரும் மயிலை திருவள்ளுவர் ஆல யத்திற்கு வருகை புரிந்து வள்ளுவரை வணங்கியுள் ளனர்.

தமிழ்ப் பெருமக்களின் இணையற்ற தலைவர் **டாக்டர் முதல்வர் கலைஞர்** அவர்கள் 27.4.1973 ஆம் நாளன்று ''திருவள்ளுவர் நினைவாலயம்'' ஒன்றை மிகப் பெரிய அளவில் எழுப்பப் பெரிய திட்டம் வகுத்து அடிக்கல் போட்டார். அன்று பெருங்கூட்டம் கூடி அந்தத்திட்டத்தைப் பாராட்டி ஆரவாரம் செய்ததை நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் மயிலையில் திருவள்ளுவப் பெருமான் உள்ள தற்போதைய இடம், பெரிய மதில் சூழ்ந்த அழகிய மாளிகையும் மண்டபமும் எழுப்பப் போதுமானதாக இல்லை எனப் பின் கருதப்பட்டதால் **டாக்டர் கலைஞர்** அவர்கள் நுங்கம்பாக்கம் ஏரிக்கரையில் ஆசியாவிலேயே பெரிய மண்டபம் எனக் கருதப்படும் மண்டபத்து டன் மிக அழகிய ''வள்ளுவர் கோட்டம்'' எழுப்பி யுள்ளார். தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்தக்கடமைப் பட்டுள்ளது என்பதை நன்றிப் பெருக்குடன் கூற விரும்புகின்றேன்.

தமிழர் சமுதாயம் என ஒன்று இருக்கின்றது. அச்சமுதாயம் பெரும் நாகரீகமும் அறிவும் படைத் தது என உலகம் தெரிந்து கொள்ள திருக்குறளைப் படைத்த ஒரு மாபெரும் தமிழ் முனிவன், மாபெ ரும் சிந்தனையாளன், மிகப்பெரியசமுதாயச் சிற்பி, மிகப்பெரிய கவிஞன், அரசியல் பொருளாதார விற் பன்னர், மாபெரும் சட்ட வித்தகர், இணையற்ற மேதை, உலகம் போற்றும் மனிதாபிமானி வாழ்ந்த இடமே திருவள்ளுவர் ஆலயம் ஆகும். மயிலை திரு வள்ளுவர்ஆலயமும் பிரசித்திபெற **'குறளோவியம்'** எழுதி உலகுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக **முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள் ஆவனச் செய்ய வேண்டும் என்பது என்போன்ற வள்ளுவ நேயர்களின் ஒருமித்த வேண்டுகோள் ஆகும்.

திருவள்ளுவர் நாமத்தை வாழ்த்துவோம் வாரீர்
தீந்தமிழ்ப் பாவலன் தெய்வப்புலவன் மேலோன்
தேனினும இனியநல் திருக்குறளைத்
தித்திக்கும் செந்தமிழில் வடித்தோன் வாலறிவன்
(திருவள்ளுவர்)

பகுத்தறிவுப் பகலவன் பாமரரின் நண்பன்
பகுத்துண்ணும் பாங்கைப் போதித்தவன்
பெரியோன்
பொதுநீதி வகுத்தவன் பொய்யில் புலவன்
பொல்லாத குலத்துக்கொரு நீதியைச் சாடியவன்
சான்றோன் (திருவள்ளுவர்)

கல்வியைக் கண்என்றான் கருணை நிதியவன்
காலத்தைவென்று நம் நெஞ்சத்தில் நிறைந்தவன்
(திருவள்ளுவா)

# திருக்குறளின் பெருமை

குறளின் பெருமை கூற வந்த அக் காலப் புலவர் கபிலர்...

''தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்''

என்று வியந்து போற்றுகிறார்.

காலை நேரம் கபிலர், பசும்புல் ஒன் றைப் பார்க்கின்றார். தரையுடன் ஒட்டிக் கிடக்கும் அந்தச் சிறிய புல்லின் நுனியில் தினையின் அளவைக் காட்டிலும் குறை வான ஒரு பனித்துளியையும் காண்கின்றார். பனித்துளியை உற்று நோக்குகிறார். அந் தப் பனித்துளியின் அளவுக்குள்ளே ஆங் கருகே ஓங்கி உயர்ந்து நிற்கும் பனைமரம் முழுவதும் தெரிகிறது. அந்தக் காட்சி கபி லரைக் கற்பனைச் சிறகடித்து பறக்கச் செய் கிறது. ''ஆகா! ஒரு சிறு பனித்துளிக்குள்ளே பக்கத்தே உள்ள பனைமரம் முழுதும் தெரி கிறதே! இதே போலத்தான் வள்ளுவனின் குறட்பாவுக்குள்ளும் இந்த வையகத்துக்குத் தேவையான பெரும்பொருள் பொதிந்து கிடக்கிறது'' என்கிறார்.

—மாண்புமிகு **முதல்வர் டாக்டர் கலைஞர்**

# விஞ்ஞான நோக்கில்



# மெய்ஞ்ஞான விநாயகர்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு தெய்வம்


பேராசிரியர் தேவ. நடராஜன்

அரசுத்துணைச் செயலாளர், நிதித்துறை.


### சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தெய்வம்

இந்து சமயம் போற்றும் கடவுள் திருவுருவங்கள் அனைத்தும் மிக உயர்ந்த உட்கருத்தினை மக்களுக்கு இடைவிடாது உணர்த்தும் வடிவங்களாகவே அமைந்துள்ளன. விஞ்ஞான நோக்கில் சோதிக்கும் பொழுதும், அத்திருவுருவ வடிவங்கள் எவ்வளவு உயர்ந்த தெய்வீக உட்கருத்துக்களையும்- விஞ்ஞானக் கோட்பாடுகளையும் மக்களுக்கு உணர்த்துவதாக உள்ளன என்பது விளங்குகின்றது.

விஞ்ஞான நோக்கில் விநாயகர் உருவினைப் பார்க்கும்பொழுது, அத்திருவுருவம் இன்று உலகெங்கும் போற்றப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இன்றியமையாத தேவையினை வலியுறுத்தும் வடிவாகவே விளங்குகிறது. மனிதனின் நல்வாழ்விற்கு மிருகங்களும், பிற அஃறிணையும் பெரிதும் உதவுகின்றன. ஆகையால் மனிதன் மிருகங்களையும் பறவைகளையும், அவை அழிவுபடாத வகையில் பேணிப் பாதுகாத்தல் வேண்டும். அவற்றிடம் அவன் இரக்கமுடையவனாகவும் இருத்தல் வேண்டும். இன்று உலகின் எல்லா நாடுகளிலும் மிருகங்களையும் பறவைகளையும் பாதுகாப்பதற்கான செயல்முறைகள் முனைந்து மேற்கொள்ளப்படுகின்றன. மிருகங்களில் பெரிதான யானையின் தலையும், மனித உடலும் அழகுற அமைந்த விநாயகர் மூர்த்தம், மக்களுக்கும் மிருகங்களுக்கும் இடை தேவையான வாழ்முறை ஒருமைப்பாட்டினை (ecological balance integration and unity) உணர்த்தும் பெரிய தத்துவமானத் தெய்வமாகும்.

மேலும் புலால் மறுத்தலின் தேவையினையும் சைவ உணவின் மேன்மையினையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துவதாகவே உள்ளது. மிருகங்களில் யானை கம்பீரத்தோற்றம் உடையது. அயராத உழைப்பு, திடபலம், அறிவு முதலியன அமையப் பெற்றது. இத்தகைய மேன்மைகளுடன் அளவிடற்கரிய சக்தியின் அரிய உருவமாக விளங்கும் யானை உண்பது தாவர உணவினைத்தான்! அந்த யானையின் பிளிறுதலில 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தினையும் கேட்கலாம். இவ்வகையில் மக்களுக்கும் மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் இடையே தேவையான வாழமுறை கட்டுப்பாடும் ஒருமைப்பாடும் (Proper balance and control between the animal kingdom and plant Kingdom) இருத்தல் வேண்டும் என்ற விஞ்ஞானக் கோட்பாட்டினை உணர்த்தும் மூர்த்தமாகவும் விநாயகர் விளங்குகின்றார்.

சமய வழிபாட்டில் முதல் வழிபாடு விநாயக மூர்த்திக்கே. அப்படியே மக்களின் முதற்கடமை ஒருமைப்பாட்டு உணர்வினைப் போற்றுவதலேயாகும்.

ஓங்கார வடிவம்- விநாயகரின் திருவுருவம், ஒருமைப்பாட்டின் தெய்வீக உருவம், 'ஓங்காரம்' எல்லா எழுத்தொலிகட்கும் முதலாய் அமைந்தது, அஃது அகத்தும் புறத்தும் இயற்கையாய் ஒலிக்கும் ஓசை; ஓங்காரம் - படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் இயற்றவல்லது. எச்செயலையும் தடைகள் இல்லாமல் வெற்றியுடன் முடிப்பதற்கு அச்செயலைத் தொடங்குவதற்கு முன்னர் முதற்கண் வழிபடப்பெறும் கடவுள் ஒருமைப்பாட்டு உருவினரான விநாயகரே.

### ஆண்-பெண் ஒருமைப்பாட்டுத் தெய்வம்

ஒருமைப்பாடு எங்கும் எதிலும் வேண்டும். வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அது வியாபித்திருக்க வேண்டும். ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. 'சக்தியும் சிவமுமாந் தன்மை, இவ்வுலகமெல்லாம்' என்கின்றது சிவஞானசித்தியார். விநாயகமூர்த்தம் இதனை அழகுற வெளிப்படுத்துகிறது. அதில் தந்தமுள்ள பகுதி



பேராசிரியர் தேவ. நடராஜன்

(எம்.ஏ., மானிடவியல் டிப்ளமா, ஃபோர்டு நிறுவன ஆராய்சசிப் பயிற்சி (சென்னை), எப்.ஆர்.இ.எஸ்.(இலண்டன்) (புவியியல் டிப்ளமா) (பிரெஞ்சு சர்டிபிகேட்) (எம்.ஏகக்கு மேலான பல்கலைக் கழக பொருளியல் டிப்ளமா) (நூலகவியல் சர்டிபிகேட்)



ஐம்முக விநாயகர்

ஆண் கூறு; தந்தமில்லாத பகுதி பெண் கூறு. இவ்வாறு விநாயக மூர்த்தத்தில் ஆண்-பெண் என்ற இரு கூறுகள் பால் பாகுபாட்டினைக் கடந்து ஒருங்கிணைந்து செயல்படுதல், ஆண் பெண் ஒருமைப்பாட்டின் இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தி விளக்குகின்றது.

### தொழில்களில் ஒருமைப்பாடு

உலகில் நிகழும் எல்லாச் செயல்களும் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல், என்ற ஐந்து பெரும் தொழில்களில் அடங்கும். விநாயகரின் ஐந்து கரங்களில் அமைந்துள்ள ஐந்து பொருள்களும் இந்த ஐந்து தொழில்களை உணர்த்துவதாகவே உள்ளன. ஒரு கரத்தில் ஏந்தியுள்ள 'பாசம்' படைத்தல் தொழிலைப் புலப்படுத்தும். 'பாசம்' பிறவிக்கு வழிகோலுகின்றது அல்லவா? ஒற்றைக்கொம்போ காத்தல் தொழிலைக் காட்டும். துதிக்கை மறைத்தல் தொழிலைத் தெரிவிக்கும். அங்குசம் அழித்தல் தொழிலைக் காட்டும். மோதகம் அருளல் தொழிலை அறிவிக்கும். ஐந்தொழில்களையும் அளவோடு ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்தும் அழகிய ஞானமூர்த்தமே ஐங்கரத்த விநாயகர்.

### ஞானத்தில் ஒருமைப்பாடு

விநாயக மூர்த்தம் ஞானசொரூபம். அது பரஞானம், அபரஞானம் ஆகிய இரண்டினையும் அறிவக்கும் குறிகளைக் கொண்ட அழகிய மூர்த்தம். அதனுடைய ஒடிந்த கொம்பு அபரஞானத்தைத் குறிக்கும். ஒடியாத முழுமையான கொம்பு பரஞானத்தைக் குறிக்கும். இஃதன்றி ஒடியாத கொம்பும், ஒடிந்த கொம்பும் முறையே பதிஞானம், பாசஞானம் ஆகியவற்றினைக் குறிப்பதாகவே அமையும். பாசஞான நூலான பாரதம் எழுதத் துணை செய்தது ஒடிக்கப்பெற்ற கொம்பு. பாசஞானம் கலைஞானமாகிச் சிவஞானத்திற்கு வழிகோலும். உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகும் சிவஞானம் என்ற மும்மதத்தினையும், ஒருங்கிணைத்த ஞான மதத்தின் ஒப்பறற தலைவராக விநாயகக்கடவுள் விளங்கின்றார்.

### சமயங்களில் ஒருமைப்பாடு

சமய பேதங்களைக் கடந்து சைவர்க்கும், வைணவர்க்கும் வழிபடு கடவுளாக விளங்குபவர் விநாயகர்.

மேலும் விநாயக மூர்த்தம் ஒன்றை வழிபட்டால் போதும், சிவன், சக்தி, விஷ்ணு ஆகிய பெரும் தெய்வங்களை வழிபட்ட பலன் கிட்டும். ஏனெனில் அத் தெய்வங்களின் அம்சங்கள் விநாயகர் திருவுருவில் அமைந்துள்ளன. விநாயகரின் நாபி பிரம்மசொரூபமாக விளங்குகின்றது. திருமுகம் திருமாலின் அம்சம், முக்கண் சிவ அம்சம், இடது பாகம் சக்தி வடிவம், வலப்பாகம் சூரிய அம்சம், ஆதிசங்கரர் வகுத்த ஆறு சமயங்களிலும் (ஷண்மதஸ்தாபனம் - அறுவகை வழிபாடு) விநாயகர் வழிபாடு உண்டு.

### வழிபாட்டில் ஒருமைப்பாடு

வெள்ளெருக்கு முதல் கருங்கல் வரை பேதமின்றிப் பலபொருள்களைக் கொண்டும் விநாயகர் வடிவம் செய்து வழிபடலாம். வெள்ளெருக்கு, மஞ்சள், சந்தனம், மலர், மரம், சுதை, மண், கருங்கல், பொன், வெள்ளி, செம்பு, பளிங்கு போன்ற பல பொருள்கள் விநாயகர் வடிவம் அமைக்கப் பயன்படுகின்றன. விநாயக சதுர்த்தியன்று மண்ணினால் செய்த விநாயகர் வடிவனை அனைவரும் வழிபடுவர்.


அன்பு கணபதி இல்லாத இடமே இல்லை. எங்கும் எவர்க்கும் எளிவந்தருளும் விநாயகப் பெருமானை வழிபட வேண்டப்படுவதெல்லாம் அன்பு ஒன்றுதான். அன்புவழிபாட்டில் மக்கள் அனைவரையும் ஒன்று படுத்துகிறார் விநாயகப் பெருமான்.

### காலம் இடம் கடந்த ஒருமைப்பாடு

காலம் இடமெல்லாம் கடந்து நிற்பவர் கணபதி, ஓங்காரம் அநாதி, அதற்குக் காலம் கற்பித்தல் முடியாது. ஆகையால் ஓங்கார வடிவினரான விநாயகரும் அநாதி. பல காலங்களையும் விநாயகர் பிணைத்து நிற்பதை வேதங்களும் புராணங்களும் தெரிவிக்கின்றன. வேதகாலத்திலேயே விநாயகர் வழிபாடு இருந்திருக்கின்றது என்று தெரிகின்றது. காலத்தினால் மட்டுமின்றி இடத்தினைப் பொறுத்த அளவிலும் ஒருமைப்பாட்டினை வளர்க்கும் ஒப்பற்ற தெய்வமாக விநாயகர் வியாபித்து நிற்கின்றார்.

### நாட்டுப்பற்று-தேசிய ஒருமைப்பாடு

விநாயக சதுர்த்தியன்று மண்ணனால செய்த விநாயகர் திருவுருவினையே பெரும்பாலோர் விரும்பி வழிபடுதல், பிறந்த மண்ணை, பிறந்த பொன்னாட்டைப் போற்றுதல் வேண்டும் என்ற உட்குறப்பினையும் கொண்டது போலும். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்றார் மகாகவி பாரதியார். விநாயகர் வழிபாட்டில் ஒருங்கிணைந்த தெய்வ பக்தி தேச பக்தியாகப் பரிமளிக்கிறது. நாடெங்கும் மக்களால் கொண்டாடப்பெறும் விநாயக சதுர்த்தி விழா தேசிய விழாவாக மலர்நது தேசபக்தியினையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் ஓங்கச் செய்



## உலகப் பொதுமறை

திருக்குறள் உலகப் பொதுமறை.
திருக்குறள் சர்வதேச நூல்.
அதைத் தேசிய அளவில்
சுருக்கிக்கொள்வதை என்னால்
ஒத்துக் கொள்ள இயலவில்லை.
திருக்குறளை அறியாதவர் யாரும் இல்லை
என்ற நிலையை வளர்த்தாக வேண்டிய
பணியில் நாம் ஈடுபடுவோம்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்

கின்றது. நமது நாட்டின் விடுதலைப் போரில் மக்களை ஒருங்கிணைக்க, மகாராஷ்டிரம், விநாயக சதுர்த்தி விழாவினைத் தேசிய விழாவாகவே மேற்கொண்டது. விடுதலை வீரரான பாலகங்காதார திலகர் போன்ற பெருந்தலைவர்கள் விநாயக சதுர்த்தி தேசிய விழாவாக வெற்றி பெறச் செய்தனர். வழிபாட்டில நாடெங்கும் ஒருங்கிணைய விடுதலைப் போருக்கு மக்களும் வீறுகொண்டு எழுந்து, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுடன் தீவிரமாகச் செயல்பட்டு வெற்றிகண்டனர்.

**நிலம்-நீர் ஒருங்கிணைப்பு**

பூமி விளைந்தால்தான் நாட்டில் பஞ்சம் இருக்காது. நல்ல பூமி விளைச்சலுக்கு மண்வளம் வேண்டும். மண்ணினுல் அமைந்த விநாயகர் திருவுருவம் மண்வளம பாதுகாக்கப்படுதல் வேண்டும், போற்றப்படுதல் வேண்டும் என்பததனை அறிவுறுத்துவதாக உள்ளது. மேலும் நிலமும் நீரும் தக்கவாறு ஒருங்கிணைந்தால் தான் நல்ல விளைச்சல் உண்டாகும். கிடைக்கும் நிலமும் நீரும் தக்க அளவில் நல்ல முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்று இன்று விஞ்ஞானிகள் வெகுவாக வலியுறுத்துகின்றனர். இந்த சிறந்த விஞ்ஞானக் கருத்தினையே மண்ணில் செய்த விநாயகர் உருவினைச், சதுர்த்தி விழாவிற்குப் பிறகு பூரணமாக நீரில் கரைத்தல் உணர்த்துகிறது.



வலம்புரி விநாயகர்

### காவிரி தந்த கணபதி

சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்,
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரை கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி ஆக்குவாம்.
—சிவப்பிரகாசர்.

சீர்காழியில் இந்திரன் உண்டாக்கிய நந்தவனம் தழைக்கவே காவிரியை அகத்தியர் கமண்டலத்திலிருந்து பெருகியோடச்செய்தார் என்பது கந்தபுராணம் காட்டும் வரலாறு ஆகும்.

# காஞ்சி காமாட்சி



**புலவர் ச. சோமசுந்தரம்,** எம்.ஏ.,பி.எட்.,

**இராசிபுரம்.**

### அழகொழுகும் அன்னை

''துணையும தொழும்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனி மலர்பூங்
கணையும் கருப்புச் சிலையும்மென் பாசாங்கு சமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவது அறிந்தனமே''

என அபிராம பட்டர் பாடிய புனித அபிராமி அந்தாதியல் - தித்திக்கும் செந்தமிழத் தேன் சுவையில் திரிபுர சுந்தரியென வருணனை செய்வது அன்னை காமாட்சியின் அழகொழுகும் திருவுருவை யன்றோ!.

காமனுடைய கருமபு வில்லையும மலரம்பையும் தாங்கிப் பாசாங்குசமும் கரத்தினிலேந்தி காட்சித் தருகிறாள் காமாட்சி எதற்காக?

மன்மதன் தன் கரும்பு வில்லாலும், மென் மலர் அம்பாலும் அளவுக்கு அதிகமாகச் செலுத்தித் தர்மம் மீறித் தறிகெட்டுப் போகச் செய்கிறான். ஆனால் அன்னையோ, உயிர்கள் ஐம்புலன்களை அடக்கி அறத்தின் வழி நின்று, மனத்தை ஒருமைப் படுத்தி அருளொளி பெறவே கரும்பு வில்லைத் தாங்குகிறாள். எல்லை மீறிப் போகாமல் கட்டுப் படுத்தவே பாசமும் அங்குசமும் ஏந்துகின்றாள். மனித மனோ இந்திரியங்கட்கு அதீதமான பராசக்தி உணர்விலோ அல்லது உணர்விறந்த நிர்விகல்ப ஞான நிலையிலோ ஜீவப் பிரம்ம ஐக்யத்தை ஏற் படுத்துகிறாள். அதனால்தான் மூகர், ' சிங்காரத்திலிருந்து அத்வைதம் வரை எல்லாமாக இருக்கின்றாய்' என்கிறார்.

### அறம் வளர் செல்வி

இறைவன் இருநாழி நெல் கொடுக்க, அதுவே அன்னையின் அருட்கரத்தால் குன்றாது வளர அனைவருக்கும் அன்னம் வழங்கி யறங்கள் முப்பத்திரண்டையும் செய்து அறம் வளர் செல்வியாகத் திகழ்கிறாள். இதனைச் சேக்கிழார். ''புண்ணியத் திருகாம கோட்டத்துப் பொலிய, முப்பதோடு இரண்டறம் புரக்கும்'' எனப் பாடுகிறார்.

அன்னப்பூரணிக் கோலம் கொண்ட காசியைப் போல ஆறு சிகரங்களோடு காமகோட்டக் கருவறை கொண்டாள். அதில் தருமத் துவாரம் வழியே தரிசித்து வேண்டினால் அருட் செல்வமும், பிச்சாதி துவாரம் வழியே தரிசித்துக் கையேந்திப் பிரார்த்தனை செய்தால் பொருட் செல்வங்களையும் வாரி வழங்குகின்றாள்.

### பொன்னின் சிறப்பு

இராமகிருஷ்ண பரமஹம்சர், மண் பொன், பெண் என்னும் மூவாசையையும் துறக்க வேண்டுமென்கிறார். பேராசையே தள்ளத் தக்கது. பொன் அல்ல. தங்கம் சௌபாக்கியத்தையும் ஆரோக்கியத்தையும் ஆற்றலையும் தரும். அன்னையின் அருளைக் கவரும் சக்தி பொன்னுக்கு இருப்பதால தான் பெண்ணுக்குப் பொன்நகை அணிவித்துத் திருமணம் செய்கிறார். தீட்டுக்களை நீக்கிச் சாந்நித்யம் நீங்காமல் மந்திர சக்தியைப் பேணிக் கொடுப்பதில் பொன்னுக்குச் சிறப்புமிகு ஆற்றல் இருப்பதால் தான், தில்லை, திருவரங்கம், திருமலை, பழனி போன்ற தலங்களில் உள்ள ஆலயங்களில் பொன் வேய்ந்த விமானங்கள் அமைத்திருக்கின்றனர்.

### பொன் மாரி பொழிதல்

நான்முகன் ஹேம காமாட்சியை (பொன்னிறமுள்ள) நிறுவிக் குடமுழுக்குச் செய்தான். உந்தித் தாமரையில் உதித்த வேதா ஒரு செங்கமலத்தை அப்போது விண்ணில் வீசினான். வீசிய தாமரை மின்னலென மாறி, காட்டாற்று வெள்ளமெனப் பூமியை நோக்கி வேகமாக வந்தது. அந்தக் கமலத்திலிருந்து மானுடன் ஒருவன் தோன்றிக் கலைமகள் கேள்வனைத் தொழுது நின்றான். அயனும் அவனை அரவணைத்து ஆகாச பூபதியென்று பெயரிட்டு அன்போடு அழைத்து, இந்தத் தொண்டை மண்டலத்தைச் செங்கோல் ஒச்சி முறையோடு ஆட்சி செய்து அறநெறி சென்று அம்பிகையின் அருள் பெறுகவென ஆசிர்வதித்தான்.

ஆனால் அவனோ ஆன்மீக நெறிக்குப் புறம்பாக நாத்திகம் பேசி ஆலயப் பூசனைகளையும் திருவிழாக்களையும் தவிர்த்தான். அதனால் நாடெங்கும் மழையின்றி வளங்குன்றி வறுமை கோரத் தாண்டவம் ஆடியது. மன்னனுக்கோ மக்கட் பேறில்லா மாபெரும் குறை வருத்தியது.

வாடிய மன்னன் அன்னையைத் தேடிச் சென்றான். அன்னையின் அடிமலரில் அர்ச்சனை செய்து பக்தி பரவசத்தில் உருகியுருகி வழிபட்டான். அடிப்பதும் அணைப்பதும் அன்னையின் அருளன்றோ!

காமாட்சியின் கருணை இராணியின் கருவில் உயிர் கொள்ளச் செய்தது. அழகான ஆண் மகவு ஒன்று பிறந்தது. எங்கும் கொண்டாட்டம். பெயரிடும் நாள் விழா பெரிய அளவில் பிரமாதமாகக் கொண்டாடப்பட்டது. தான தருமங்கள் எளியோருக்கும் மெலிந்தோருக்கும், வழங்கப்பட்டன. ஆடவர்க்கும் பெண்டிருக்கும் அறுசுவை யுண்டி அளிக்கப்பட்டது. அனைவரும் அமர்ந்து உண்ணும் நேரத்தில் விருந்துண்ணும் முற்றத்தில் பொன்மழை பொழிந்தது.

ஞானிகள் மேலே பார்த்தனர். அன்னை விஸ்வரூபமாகக் காட்சியளித்தாள். காமாட்சியின கரத்தின் கீழே தொண்டை மண்டலம் இருந்தமையால் கரத்திலிருந்து பொழிந்த கனகமாரி தொண்டை



மண்டலம் முழுவதும் பெய்தது. வறுமைக்கு வறுமை வந்தது. வான்நகர் வளங்கள் மிகுந்தன. செல்வச் செழிப்பு நிறைந்தன.

ஒன்றரை மணி நேரம் பொழிந்த பின் மீண்டும் முற்றத்தில் உண்ண ஆரம்பித்தனர். பொன் மஞ்சத்தில் படுத்திருந்த பன்னிரு நாள் பாலகன் படுக்கை விட்டிறங்கித் தவழ்ந்து சென்று ''தந்தையே! பொன்மாரி பொழிந்ததேன்! காரணம் சொல்லட்டுமா? கேள்!'' எனப் பேசத் தொடங்கினான்.

என்னைப் பெற்ற அன்னை மகாராணி பயிற்றம் பருப்பைப் பொங்கலுக்காக எடுத்துக் கொடுக்கும் போது தன் நெளி மோதிரத் தொங்கட்டானில் இருந்த தங்க முத்துக் கழன்று பயிற்றம் பருப்பில் விழுந்ததைக் கவனிக்கவில்லை. சமையல்காரர்களும் கவனியாது சமையல் செய்தனர். அந்தப் பொன்மணியும் பொங்கலோடு அன்னையின் பொன் வயிற்றில் புகுந்ததன் பயன்தான் பொன்மழை என்றான்.

மன்னன், காமாட்சியின் குடலில் எப்படி சேர்ந்தது எனக் கேட்க, குழந்தை ''அதோ பார்! சுமங்கலியின் வடிவில் அன்னை அமர்ந்து உண்ணும் அழகைப் பார்!'' என்றான். பூபதி பார்த்தான். சுமங்கலிகள் உண்ணும் வரிசையில் குழந்தை காட்டிய இலைக்கு முன் யாருமில்லை. (அன்னை அந்தர்யாமி ஆகிவிட்டாள்) ஆனால் பரிமாறிய பணடங்கள் குறைந்திருந்தன. பயிற்றம் பொங்கலிலும் விரற் சுவடுகள் தெரிந்தன.

தாய் தனயன் ஆன எனக்கு அருள் புரிய வேண்டி மறைந்தாள் எனச் சொல்லி, மீதிருந்த பயிற்றம் பொங்கலைத் தானும் உண்டு மற்றவர்கட்கும் அருட் பிரசாதமாக வழங்கினான். பொங்கலோ கொடுக்க கொடுக்கக் குறையாது பொங்கியது. அனைவரும் அதிசயித்தனர்.

அம்பிகையை நீ இனங் கண்டு கொண்டாய். அந்த அம்மாவும் நீ யார்? என்பதைக் காட்டி விட்டாள். தும்பிக்கையில்லா விட்டாலும் நம்பி வருவோர்க்கு நம்பிக்கை தரும் நாதன் நீயன்றோ! என்று கைகூப்பித் தொழுதனர். இதனை விநாயகப் புராணம்

''அண்டரும் புகழ் துண்டீரன் ஆண்டு துண்டீர நாடாய் அத்
தண்டகன் பின்னர் ஆண்டு தண்டக நாடாய்ப் பின்னர்த்
தொண்டைமான் ஆண்டுத் தொண்டை நாடெனத் துலங்கிற்றென்ப
பண்(டு)அயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொல்லை நாடு''

எனப் பாடுகிறது. இதற்கு அடையாளமாகக் காஞ்சியில் பிள்ளையார் பாளையம்என்ற பகுதி இன்றும் உளது. சங்கரர் வேண்ட, காலடியில் ஏழை யந்தணருக்காகவும், வேதாந்த தேசிகர் வேண்ட அறிவீனனான ஏழை பிரம்மசாரிக்கும் திருமகள் பொன் மழை பொழிந்தாள். ஆனால் நம் அன்னை காமாட்சியோ தொண்டை மண்டலம் முழுதும் பொன் மழை பொழிந்தப் பேரருளை மூகர்

''துண்டீராக்யே மஹதி விஷயே ஸ்வர்ண வ்ருஷ்டி ப்ராத்ரி'' எனப் புகழ்கின்றார்.

### புலிக்கொடி பொறித்தல்

வெள்ளி பனி மலையில் தம் புலிக் கொடி பொறித்த கரிகாலன் திக் விஜயம் செய்ய, அன்னை காமாட்சியின் அருள் நாடி வந்தான். காம கோட்டத்துக் கருணை தெய்வம் "என் ஆலயத்துள் உள்ள ஐயப்பனைப் பணிந்து, அவன் தரும் கரமலர் செண்டை எடுத்துச் சென்றால் செல்லுமிடமெல்லாம் வெற்றித் திருமகளையடைவாய்'' என்றாள். வளவன் வந்து வணங்க அன்னை ஆணைப்படி ஐயப்பன் சிலையிலிருந்த கரத்திலிருந்து மலர் செண்டு விழுந்தது. அதை எடுத்துச் சென்ற கரிகாலன் இமயவரையை வெற்றி கொண்டான். புலிக் கொடி பொறித்துப் பொங்கும் களிப்பில் மிதந்தான். இதனைச் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டுகிறார்.

''கச்சி வளைக்கச்சி காமகோட்டம் காவல்
மெச்சியினிதிருக்கும் மெய்ச்சாத்தன் கைக்கொண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு'' — என்பதே அப்பாடல்.

### அரியணை அடைந்த மன்னன்

சல்லியாபிதன் என்பவன் தன் தமையனான விக்கிரம சோழர்களில் ஒருவனான மனனனின் அரசைக் கவர்ந்து கொண்டு விரட்டக் காஞ்சிக்கு வந்து காமாட்சியின் தொண்டன் ஆனான், அன்னையின் அருளால் அரசி கருவுற்று அணங்கு ஒன்றைப் பெற்றாள். பக்தி நெறியில் பல ஆண்டுகள் உருண்டன. பாவையும் பருவம் அடைந்தாள்.

தேவியின் சித்தத்தால் குலசேகரப் பாண்டியன் புனிதத் தல யாத்திரைக்காகக் காஞ்சிக்கு வந்தவன் பாவையின அழகில் மனதைப் பறிகொடுத்தான். அரசிழந்த பரதேசியின் மகளெனப் பாராது திருமணம் புரிந்து கொண்டான்.

பின்னர் சல்லியாபிதனைப் போரில் வென்று தன் மாமனாரை அரியணையேற்றினான். அரசேற்ற விக்ரமன் சில ஆண்டுகள் ஆட்சி செய்து, யாரும் விரட்டாமலே அரசைத் துறந்து துறவு பூண்டு அன்னையின் அடிமலர் பணிந்து, முக்தியடைந்தான்.

### ஆண்மையருளல்

நர்மதை நதி கரையில் ஆண்மையிழந்த அந்தணன் பலபத்ரன் எனபவன் வாழ்ந்து வந்தான். காம கோட்டத்தில் கருவறையில் அன்னை காமாட்சியின் அருவ உருவான பிலகாசத்தை 108 தடவைகள் வலம் வந்து இன்னருளை வேண்டியுருகி நின்றான். அன்னையின் அருளால் ஆண்மையும் பெற்றான். மக்கட் பேறும் பெற்றான். பின்னர் சந்தான தம்பம் ஒன்றினைக் கருவறையில் நாட்டி அதன் அடியே துளையிட்டு அதன் வழியே பிலாகாசம் வெளிப்பட செய் தான்.

இதனையறிந்த இசை ஞானியான சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாம சாஸ்திரிகள் ''அரோக த்ரு சரீரம்'' தர வேண்டி அருள் புரிய வேண்டுகிறார்.

### தசரதனுக்கு அருளல்

மகப் பேறு விரும்பிய தசரதன், புத்ரகாமேஷ்டி யாகம செய்வதற்கு முன் யாத்திரையாகக் காமகோட்டம் வந்து அம்பாளையுருகி வழிபாடு செய்தான். மககட் பேற்றைப் பெற மனதார வேண்டினான். அப்போது விண்வழியே வந்த அசரீரி ''உன் விருப்பம் நிறைவேறும்! ஓராண்டில் தெய்வக் குழந்தைகளைப் பெறுவாய்'' என்று கூறியது. அசரீரியின் வழியாக அன்னையருள்புரிந்தாள் எனப் பேருவகையடைந்தான் தசரதன்.

## திருவிழாக்களில் உலாவுக்கு எழுந்தருளும் பஞ்சமூர்த்திகள்

1. இறைவன்
2. இறைவி
3. விநாயகர்
4. முருகர்
5. சண்டேசுவரர்

### வாக்பவ பீடம்

நான்மறையில் நவின்ற 51 எழுத்துக்களே 51 சக்தி பீடங்களாகும். நாபிக்கு அவளது எழுத்தொலி ''ஐ''. அதனுடன் மகர ஒற்று சேர்ந்தாலே வாக்பவ பீஜ மந்திரமாகும். சக்திக்குப் பேரானந்தம் பொங்கும் பீடங்களாக, சக்திபீடம், மத்திய பீடம், வாக்பவ பீடம் ஆகியன என்பர். இவற்றில் காஞ்சியே வாக்பவ பீடம்.

ஸ்ரீசக்ர உபாசகர்களில் துருவாசர், பரசுராமர், தௌம்யர், மூகர் என்னும் 20 வது பட்ட மேற்கொண்ட சங்கராச்சாரியார் ஆகிய ஞானிகள் யுகத்திற்கு ஒவ்வொருவராக அன்னையைப் புகழ்ந்து பாடி, யுக துதி கர்த்தாக்களாயினர். துருவாசர் 2000 சுலோகங்களும், பரசுராமர் 1500 சுலோகங்களும், தௌம்யர் 1000 சுலோகங்களும், மூகர் 500 சுலோகங்களும் தன்னைப் பாட அருள் புரிந்தாள்.

காமாட்சியின் சன்னதியிலேயே விதேகக் கைவல்யம் அடைந்த ஆதி சங்கரர், மீனாட்சி பஞ்ச ரத்தினம், சாரதா புஜங்கம், பரம ராம்பா அட்டகம், சௌந்தர்ய லகிரி, தேவி புஜங்கம், திரிபுர சுந்தரி மானச பூஜா தோத்திரங்கள் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். அவர்தம் தேகம் துறக்கும் முன்

''உளம் செல்லும் இடம்யாவும் உன்உருவமே
இலகுதம்மா
சிரம் தாழும் இடமெல்லாம் உன் சேவடி சிறக்
குதம்மா''

எனப் பாடிக் காமாட்சியின் கழலினையடைந்தார்.

கச்சி ஸ்ரீமடத்தில் யோக லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த சங்கரர், தாம் மறையும் நாளன்று மோட்ச லிங்கத்தைத் தில்லையில் நிறுவ அனுப்பியதாக ஆனந்த கிரீயம் கூறுகிறது. எனினும் காமாட்சியின் திருப்பெயரையோ, தில்லைக் கூத்தனின் திருப்பெயரையோ, ஆரா அன்பின் அடர்த்தியனால் தான் பாடிய ஒரு துதியில் கூட கூறவில்லை. எனினும் ஆதிசங்கராச்சாரியருக்குப் பதிலாக இருபதாவது காமகோடி பீடாதிபதி மூகரே கலியுக துதி கர்த்தவாகப் போற்றப்படுகிறார்.

**மூகருக்கு அருளல்**

ஊமையாக-மந்தபுத்தி உடையவராகத் திகழ்ந்த மூகர் காம கோட்டத்தில் உறங்கிக்கொண்டு இருந்தார். இவருக்கு அருகில் வாக்கு வன்மை வேண்டி, தேவி உபாசகர் ஒருவர் ஜபம் செய்து கொண்டிருந்தார். கண்மூடி ஜெபம் செய்த அவர் செவிகளில், ''வாயைத் திற; என் வாய் தாம் பூலத்தை யுமிழ்கிறேன்'' என்ற பெண் குரல் கேட்டது. ஆசார சீலரான இவர், ''இப்படி இப்பெண் பேசுகிறாளே! இவள் ஒரு விலைமகளாகத்தான் இருக்க வேண்டும்'' என நினைத்துக் கண் திறக்காமலே ஓடிப் போவென்றார். அப்போது அருகிலிருந்த ஊமை மண்டு, பே!பே! என வாய் திறக்கச் சுத்த வித்தையையே பற்களாகக் கொண்ட அன்னை தன் திருவாயிலிருந்து தாம்பூலத்தை யுமிழ்ந்தாள். அன்னையின் அருளால் ஊமை உன்னதமான மாபெரும் கவிஞனாக-பக்தனாக - ஞானியாக மாறிப் ''பஞ்ச சதி'' என்ற வடமொழி சுலோகங்களைப் பாடினார். போற்றினார், காமகோடியின் பீடாதிபதியானர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல விரிவஞ்சி ஒரு பாடலின் பொருளைக் காண்போம்.

''உன்காற் சிலம்புகள் எப்போதும்
வாயாடிக் கொண்டி ருந்தாலும்
மோன முனிவர்க்கு முடிவிலாத
ஆனந்தம் ஊட்டு கின்றனவே.

உன் திருவடி சிவந்தே யிருப்பினும்
உளத்தை வெண்மை யாக்குகிறதே
தூசால் கண்ணாடி அழுக்குறுமே
தூயநின் பாதத் துளிகளெல்லாம்

மாசுறு மனத்தின் அழுக்கையெல்லாம்
மாசற நீக்கித் தெளிவாக்கும்
ஞானக் கண்ணாடி யாக்கிடுதே!
சிவனுக்கு ஆனந்தம் தந்துகொண்டே.

பவத்திற்கு (சம்சாரத்திற்கு) துக்கமே தரு
கின்றாய்.
சிவனுக்கு மோகம் ஊட்டியநீ
சீவர்களின் மோகம் விரட்டுகிறாய்'' — என்றெல்லாம் இறைவியின் அருளினை வியந்து பாடுகிறார்.

**சுந்தரர் நிந்தாதுதி**

தேவார மூவரும் நாவாரக் காமாட்சியின் கருணையைப் பாடிப் போற்றினர். அதில் ஒன்று, நிந்தா துதியாகச் சுந்தரர் பாடுவது சுவையாக உள்ளது. காமகோடியிலே கருணைமிகும் - அன்னம் பாலிக்கும் அன்னை காமாட்சியிருக்க சிவபெருமானே! நீர் ஏன் பிச்சாண்டியாகத் திரிகின்றீர் என்கிறார்.

''வாரிருங் குழன்மை வாணெடுங்கண்
மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந் தடமார்பு நீங்காத்
தையலாள் உலகுய்ய வைத்த
காரிருங் பொழில்கச்சி மூதூர்
காம கேட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே
ஓணகாந் தன் தளியுளீரே!'' — தேவாரம்.

**முடிவுரை**

''காமாட்சியம்மா கண் பாரம்மா'' என்று கதறுவோர்க்கெல்லாம் காதலாகிக் கசிந்து கண்ணீரில் மூழ்குவோர்க்கெல்லாம் கருணைக் கடல் கருணை புரிந்த கணக்கற்ற நிகழ்ச்சிகளை யாரோ விரித்துக் கூற இயலும்? ஆசையினால் அன்னையின் அருள் வெள்ளத்தில் பூனை குடித்தது போல ஓரளவே எழுதி இன்புறுகிறேன். அவனருளாலே அவன்தாள் வணங்கி எனபது போல அன்னையின் அருளால் அவள் புகழை எழுத முடிந்தது.

அன்னையின் அருளடிப் போற்றுவோம்
அருள்ஞான அமுதினை யுண்டிடுவோம்.
வாழ்க காமாட்சியின் கருணை !

---

# கோல மயில் மீது வருக

## டாக்டர் த. அமிர்தலிங்கம்

ஓராறு முகமும் ஈராறு கரமும்
கோலமயில் மீது வருக!
ஏழைமுகம் மலர வாடும் அகம் குளிரக்
கோரும் வரம் கேட்டுத் தருக—நான்
கோரும் வரம் கேட்டுத் தருக (ஓராறு)

புவிமீது பிறப்பு தரும்போது சிறப்பும்
நீ தர வேண்டும் முருகா!
கவிபாடும் அருளும் வளர்ந்தோங்கும் பொருளும்
நான் பெற வேண்டும் முருகா!
மகவோடு மனைவி நலம்காத்து வாழ்வை
இனிதாக்க வேண்டும் முருகா!
தகவோடு ஞாலப் பணிசெய்து முத்திப்
பதம் காண வேண்டும் முருகா! (ஓராறு)

அன்று உமை யாளின் அன்பு மகனாக
நெற்றிவிழி தோன்றி வந்தாய்—ஈசன்
நெற்றிவிழி தோன்றி வந்தாய்
குன்றுகிரௌஞ்சமும் சூரர் மூவரும்
வென்று புவிஓங்கச் செய்தாய்—பகை
வென்று புவி ஓங்கச் செய்தாய்.
தெய்வ யானையும் வள்ளி மானையும்
காதல் மணம் கொண்டாய்—அன்புக்
காதல் மணம் செய்து கொண்டாய்
செந்தூர் பழநிப் பரங்குன்றம் பழமுதிர்
ஏரகம் திருத்தணி கொண்டாய்
கோயில் கொண்டாய் (ஓராறு)

மிஞ்சும் விதி பழுது ஆன போதிலும்
அதைத்திருத்தி எம்மைக் காக்க
வஞ்சகர் சதி முதல் ஆயின துன்பங்கள்
இன்றி எமை என்றும் காக்க
நஞ்சுமிகு பாம்புப் மூர்க்கமதி விலங்கும்
எம்மை அணுகாது காக்க
நெஞ்சுவலி இருமல் நோய்நொடிகள் இன்றி
உடல்நலமும் தந்து காக்க (ஓராறு)

முருகா முத்தமிழ்க் குமரா நாமம்
ஆயிரம் கொண்ட அழகா!
மருகா திருமகள் மருகா காவியம்
கோடி புகழ்பாடும் இறைவா!
சரவண பவனே சண்முக குகனே
சரணம் சரணம் சரணம்.
சுவாமிநாத நின்பத்ம பாதமே
சரணம் சரணம் சரணம் (ஓராறு)

---

பாடலிலும், அந்நேரத்தில் பக்திமயமான நிலையிலுள்ள பெண்களின் தன்மை, பதினைந்தாவது பாடலிலும் வர்ணிக்கப்படுகின்றன. பதினாறாவது பாடல் அம்மையின் அருள்போல் மழையை வேண்டுகின்றது. பதினேழாவது பாட்டில் இறைவன் நமது குற்றங்களை நீக்கி ஆட்கொள்ளும் காலத்தில் ஏற்படும் இன்பம் விவரிக்கப்படுகின்றது. பதினெட்டாவது பாட்டில் காலையில் இறைவனது அருட்பெருமை பாடி நீராடும் பெருமை கூறப்படுகின்றன. சிவனடியாரின் உறவையும், என்றும் இறைப்பணி செய்ய வேண்டுமென்றகருத்தையும், இறைவனைக் கண்டு களிக்கத்தக்க வரம்பெற்றால் காலத்தை வென்று வாழலாம் என்பதையும் விளக்குகிறது பத்தொன்பதாம் பாடல்.

எல்லாமாயிருக்கும் இறைவனின் திருவடிப் பெருமையைக் கூறிப் பூர்த்தியாகிறது திருவெம்பாவையின் இருபதாவது பாடல். ''ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி'' எனத் தொடங்கிய திருவெம்பாவை இறைவனின் திருவடிப் பெருமையை ''ஆதியாம் பாதமலர் அந்தமாம் செந்தளிர்கள்'' எனக்கூறி முடிக்கின்றது.

இருபதாவது பாடலில் மூன்றாவது வரி முதல் ஏழாவது வரிகளில் படைத்தல் (தோற்றம்) காத்தல் (போகம்) அழித்தல் (ஈறாம்) மறைத்தல் (காணாத புண்டரிகம்) அருளல் (அருளும் பொன் மலர்கள்) ஆகிய இறைவனது ஐந்தொழில்களையும் குறித்தார்

இறைவனது திருவடியாவற்றுக்கும் முந்தியது. அதற்கு முன் எதுவுமே கிடையாது. அனாதிகாலம் தொட்டு உள்ள திருவடிகளை வணங்கினார். அவை அழகியதாய் முகர இன்பமுள்ள மலர் போன்றதாய், காதுக்கினிய புகழுடையதாய் பாடினால் நாவிற்கு இனிமை பயப்பதாய், உடல் மீது பட்டால் இனபம் பயப்பதாய் இருப்பதால் 'பாதமலர்' என்றார். பெண்பாலருக்கு மலர் விரும்பத்தக்க தன்றோ?

இறைவனது திருவடிகள்தான் முடிவு. அவனிடமிருந்து அவனிடமே முடிவடைகின்றன. அத்தகைய முடிவான திருவடிகளைச் 'செந்தளிர்கள்' என்றார். தளிரிலிருந்துதானே இலையாக மாறி மேலும் வளரும். உலகத்தை உண்டாக்கக் காரணமாக இருப்பதால் 'செந்தளிர்கள்' ஆயின.

உலகத்தைத் தோற்றுவிப்பதான திருவடிளைப் 'பொற்பாதம்' என்றார். பொற் சபையான தில்லையம்பலத்தில் ஆடும் திருவடியை பான்னம்பலவனின் திருவடியைப், பொற்பாதம் ன்றார். நினைத்தவற்றையெல்லாம் அளித்து, வற்றை நாம் நுகரத்துணை செய்வதால் 'போகம் பூங்கழல்கள்' எனக் கூறி யாவற்றையும் தன் த்தேயே சேர்த்துக் கொள்ளுவதால் 'ஈறாம் ணயடிகள்' என்றார். பிறந்தவர் மீண்டும் ணியா, உன்பொன்னடிக்கே போதுகின்றேன்' றதால் ஈறாம் இணையடியாயிற்று.

தாமரையில் அமர்ந்திருப்பவன் பிரமன். ''இமரை போன்ற கண்களைவுடையவன் திருமால், மரையில் வதியும் தையலான திருமகளைத்தன் களுநசில் கொண்டவன். அவ்விருவரும் காண முடி திருவடித் தாமரைகள் 'புண்டரிகம்' எனக் மறைத்தல் என்ற 'திரோதான' சக்தியைக் அவனார்.

இத்தகைய திருவடிகள் நாம் உய்ய ஆட் காண்டு அருளும் பொன் மலர்கள் என 'அருட் சக்தியைப் பாடி' இவ்வளவு பெருமையையும் பாட செய்த மார்கழி நீராடலையும் வாழ்த்திப் போற்றினார்.

## பழனிநாதனும் சபரிநாதனும்

பழம்வேண்டி நின்றதொரு
வேலவனும் நீதானே—புலிப்
பால்தேடிச் சென்றதொரு
பாலகனும் நீதானே

கார்த்திகை தீபத்தில் ஒளிரும்
கந்தப்ப சாமியே !
மகர தீபத்தில் மிளிரும்
அய்யப்ப சாமியே!

வேலேந்தும் எழிலுருவோ
விழைந்தது பழநிமலை
வில்லேந்தும் அழகுருவோ
உகந்தது சபரிமலை !

கந்தனின் விரதமோ
கார்த்திகை மாதமே
அய்யனின் விரதமும்
கார்த்திகை மாதமே !

தாங்கி வரும் காவடி
கந்தப்பனின் சேவடி
ஏந்திவரும் இருமுடி
அய்யப்பனின் திருவடி.

—கவிஞர் பா. சந்திரசேகரன்

காவிய நாயகன் கேட்ட கதை இராமாயணம். காவிய நாயகன் திருத்திய நூல் கந்த புராணம். காவிய நாயகனான சிவபெருமான் தில்லையிலே தன்கைப்பட எழுதிய நூல் திருவாசகம். அதில் ஒரு பாகம் திருவெம்பாவை. மேனாட்டினரான டாக்டர் போப் விரும்பி படித்து மொழி பெயர்த்த நூல் திருவாசகம். அத்தகைய நூலின் ஒரு பகுதியான திருவெம்பாவையை மார்கழி மாதம் பாடுவோர் எல்லா நலன்களையும் பெறுவர். பெண்களுக்கு நல்ல கணவன் கிடைப்பான் என்பர். இறைவன் நம் அனைவருக்கும் எல்லா நலன்களையும் அருள்வாராக. !

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்
பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்
கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யக் கொண்டு அருளும் பொன்
மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

மாணிக்க வாசகர் திருவடிகளே சரணம்.

திருச்சிற்றம்பலம்

# நவதிருப்பதிகள்

ஆ. வெ. ராமானுஜம்

## (முன் தொடர்ச்சி)

### 5-6 இரட்டைத் திருப்பதி — துலை வில்லி மங்கலம்

வடக்குக் கோவில்—மூலவர் :

அரவிந்த லோசனன் (செந்தாமரைக் கண்ணன்) வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் :

கருந்தடங்கண்ணித் தாயார், துலைவில்லி மங்கலத் தாயார்.

உற்சவர்:

தாமரைக் கண்ணன், ஸ்ரீதேவி, பூமிதேவி,

தெற்குக் கோவில்—மூலவர்:

ஸ்ரீநிவாசன் (தேவபிரான்) நின்ற திருக் கோலம். திருமார்பு லட்சுமி. திருமஞ்சனத் திரு மேனி, நித்தியல் திருமஞ்சனம் உண்டு (சனிக்கிழமைகளில் விசேடமாக திருமஞ்சனம் நடத்தப்படுகிறது.)

உற்சவர் :

தேவர்பிரான், ஸ்ரீதேவி, பூமிதேவி, .

வரலாறு :

1 இந்திரன் இங்கே தவம் செய்து சில முனிவர்களைக் கேலி செய்ததன் காரணமாகச் சாபம் பெற்று அது நீங்க தவம் செய்து பலன் பெற்ற திவ்விய தேசம்.

2 முனிவர்கள் இங்கு யாகசாலை ஏற்படுத்திய போது, அவ்விடத்தில் மிகவும் பிரகாசமாக இருந்த தராசையும் வில்லையும் கண்டு ஆச்சரியப்பட்டு கையில் எடுக்க அந்த தராசு ஒரு பெண்ணாகவும், வில் புருசனாகவும் சாபத்திலிருந்து மீண்டார்கள். இங்கே துலையும் வில்லும் முக்தி அடைந்தமையால் துலைவில்லிமங்கலம் என்ற பெயர் உண்டாயிற்று.

3 அசுவினி தேவர், பிருகு மகரிஷி, மார்க்கண்டரிசி, வாயு, வருணன் ஆகியோர் வழிபட்டு அருள் பெற்றனர்.

4 நம்மாழ்வார் பாடல் பெற்ற திவ்வியதேசம்.

5 நம்மாழ்வார் மாசி மாதம் அனுச நட்சத்திரத்தன்று இந்ததலத்திற்கு எழுந்தருளி சாத்து முறை நடைபெறுவது விசேடமான ஒன்று.

6 இரண்டு எம்பெருமான்களின் திருக்கோயில்களும் அடுத்தடுத்து தாமிரவருணி ஆற்றின் வடகரையில் அருகருகே அமைந்துள்ளதால் ''இரட்டைத் திருப்பதி'' என வழங்கப்படுகிறது.

### 7 தென்திருப்பேரை

மூலவரும் தாயாரும்;

மகர நெடுங்குழைக்காதர் — வீற்றிருந்த திருக்கோலம் — குழைக்காதுவள்ளி நாச்சியார். திருப்பேரை நாச்சியார் — இரண்டு தனிக்கோவில் நாச்சியார்கள்.

உற்சவர்:

நிகரில் முகில் வண்ணன் (கண்ணன்) - ஸ்ரீதேவி பூமிதேவி.

வரலாறு:

துர்வாச முனிவர் லட்சுமியை பூமியில் பெண்ணாகப் பிறக்க சபித்ததாகவும். அதன்படி ஸ்ரீபேரையோடு (லட்சுமியின் உடலோடு) பிறந்து எம்பெருமானைப் பிரார்த்தித்து அடைந்தாள். பங்குனி பூர்ணிமையில் தாமிரபரணி தீர்த்தத்தில் கிடைத்த மகர மீன் போல் வடிவமுள்ள இரண்டு குண்டலங்களை எடுத்துப் பகவானுக்கு சமர்ப்பிக்க அதை அணிந்து ''மகர நெடுங்குழைக்காதர்.'' என்ற பெயர் சுவாமிக்கு வந்ததாகவும், ஸ்ரீதேவி, ஸ்ரீபேரை நாமத்தை தரித்ததினால், இத்தலத்திற்கு தென்திருப்பேரை என்ற பெயர் வந்ததாகவும் ஐதிகம்.

2 வருணன் குருவை அவமானம் செய்த பாவம் நீங்க, இங்கே பங்குனிபூர்ணிமையில்பகவானுக்குத் திருமஞ்சனம் செய்து பாப விமோசனம் அடைந்தார்.

3 விதர்ப்ப தேசத்தில் பஞ்சம் உண்டாக அவ்வூர் அரசன் இங்கு பகவானைச் சேவித்துத் தன் நாட்டின் செழிப்பை உண்டாக்கியதாக வரலாறு.

4 சுக்கிரன், பிரம்மா ஆகியோருக்கு பகவான் காட்சி கொடுத்த ஸ்தலம்.

ஊர் சிறப்பு:

வருடம் முழுவதும் ஏதாவது திருவிழா நடந்து கொண்டே இருக்கும். தெருவில் குழந்தைகள் விளையாடுவதைப் பகவான் காண விரும்பியதால் கொடி மரம், கருடன் எதுவும் குறுக்கே இல்லாமல் சுவாமி வீதியைக் காண்பது போன்ற அமைப்பு உள்ள கோயில். கண்ணனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட நம்மாழ்வார், ''திங்களும் நாளும் விழா வறாத திருப்பேரையில் சேர்வான்'' என குதூகலிக்கிறார்.

செயல் அலுவலர் நிர்வாகத்தில் உள்ளது.


### 8 திருக்கோளூர்

மூலவரும் தாயாரும் :

வைத்தமாநிதிப் பெருமாள், புஜங்கசயனம், குமுதவல்லி, கோளூர் வல்லி, இரண்டு தனிக்கோவில் நாச்சியார்கள்.

உற்சவர்:

வைத்த மாநிதி, ஸ்ரீதேவி, பூமிதேவி,



வரலாறு:

1 பார்வதி தேவியால் குபேரன் சபிக்கப்பட்டதால் நவ நிதிகளும் அவனைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. எனவே, குபேரன் இவ்விடத்தில் தவம் செய்து பிரார்த்திக்க, அதன்பின் ''நிசேப வித்தன்'' (வைத்தமாநிதி) என்ற பெயரோடு நிதிகளைக் காத்து வருவதாக ஐதிகம்.

2 இது மதுரகவி ஆழ்வார் அவதார ஸ்தலம், மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம் எனக்கு நம்மாழ்வாரே எனறு மதுரகவி வணங்கினார். பல திருத்தலங்களை தரிசித்தவர். வடமொழிப் புலமையும் கொண்டவர்.

3 தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இத்தலத்தில் சண்டை நடந்ததாகவும், பகவானை சேவித்துக் கொண்டிருந்த தர்மம் ஜெயித்து அதர்மம் தோற்று ஓடிவிட்டதால் ''அதர்மபிசுனம்'' என்ற நாமம் இத்தலத்திற்கு உண்டு.

4 குபேரன், மதுரகவி ஆழ்வார் ஆகியோருக்கு பகவான் காட்சி கொடுத்த ஸ்தலம். தீர்த்தமே குபேர தீர்த்தம்தான். (தாமிரவருணியாறு).

5 குபேரனுக்கு வேண்டிய பணம் கொடுத்து எம்பெருமான் அருள் புரிந்தார். அதற்காக மேலும் பணம் எங்கே இருக்கிறது என்பதைக்காண பகவான் கையில் மைபோட்டு ஆகாயத்திலும் பூமியிலும் தேடுவது போன்ற அமைப்பில் சயனத்திலுள்ள பெருமானின் திருக்கைகள் உள்ளன.

6 எம்பெருமான் குபேரனுக்கு படியளந்த அவசரம், மரக்காலை தலைக்கு வைத்துக் கொண்டுள்ளார். அதனால் செல்வம் போய்விட்டது.

படி, மரக்கால் போன்ற அளவு கருவிகளை உருட்டலாகாது என்பதை இது உணர்த்துவதாக அமைந்துள்ளது.

(ஆழ்வார் திருநகரி அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயிலின் உபகோயில்).

## 9 ஆழ்வார் திருநகரி—(திருக்குருகூர்)

மூலவரும் தாயாரும்:

ஆதிநாதர், ஆதி நாச்சியார், குருகூர் நாச்சியார், தனிக் கோயில் நாச்சியார்கள், மூலவர் நின்ற திருக்கோலம், சுயம்பு மூர்த்தி.

உற்சவர் :

பொலிந்து நின்ற பிரான், ஸ்ரீதேவி, பூமிதேவி, நீலாதேவி, பரமபதத்தில் மூன்று தேவியருடன் காட்சியருள்வது போல் இங்கும் மூன்று தேவிகளுடன் சேவை சாதிக்கிறார்.

ஸ்தல விருட்சம் :

உறங்காப் புளி மரம், பூக்கும் காய்க்கும், ஆனால் பழுக்காது, இலட்சுமணர் தான் இந்த புளியமரமாகி நிற்கிறார் என்பது ஐதிகம், நம்மாழ்வார் இப்புளியமரப் பொந்தில்தான், நிஷ்டையில் 16 வருட காலம் இருந்தார்.

நம்மாழ்வார் சந்நிதி :

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவரது அவதார ஸ்தலம். அவரது பிறவியே தெய்வப் பிறவிதான்.

கோவில் சிறப்பு :

தானாகத் தோன்றிய சுயம்புமூர்த்தி, இறைவ ரது பாதங்கள் பூமிக்குள் இருப்பதாக ஐதீகம், ஸ்ரீரங்கத்தைப் போல் இங்கும் அரையர் சேவை உண்டு. அரையர் சேவை என்பது நடனமாடிக் கொண்டும் அபிநயம் பிடித்தும் பிரபந்த பாசுரங்களை விளக்கும் முறை. வைகாசி மாத கருட சேவை அல்லது (வைகாசிப் பூரத்தன்று) நவதிருப்பதி எம்பெருமான்களையும் இவ்விடத்தில் ஒருசேர தரிசிக்கலாம். வைகாசி விசாகத் திருநாளில் ஐந்தாம் திருவிழா.

வரலாறு :

இந்திரன் இத்தலத்தில் வந்து ஆதிநாதனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றார்.

இலட்சுமி பகவானை அடைய பிரார்த்திக்க இச்சமயம் பகவான் யோக நிஷ்டையில் இருந்ததால், இலட்சுமியை மகிழ மாலையாக மார்பில் தரித்துக் கொண்டதாக ஐதீகம்.

இங்குள்ள தாமிரபரணி நதியிலே, சமுத்திர ராஜனே தன்னை சங்குராஜனாக ஆக்கிக் கொண்டு பிற சங்குகளுடன் அணி செய்து பகவானை வழிபடுவதாக வரலாறு. அதனால்தான் இந்த தாமிர வருணி நதிக்கரைக்குத் திருச்சங்கணித்துறை என்ற பெயர் வரலாயிற்று. குருகு என்ற பறவைகள் நிறைந்திருந்ததால் குருகூர் எனப் பெயர் பெற்றுள்ளது. நம்மாழ்வார் அவதரித்த ஏற்றம் பெற்றதால் ஆழ்வார் திருநகரி என வழங்கப்படுகிறது.

பிரம்மா, மதுரகவி ஆகியோருக்குப் பகவான் காட்சி அளித்த ஸ்தலம்.

உற்சவ மூர்த்தியுடன், ஸ்ரீதேவி, பூமிதேவி, நீலாதேவி, ஆதிநாத நாச்சியார், குருகூர் நாச்சியார் ஆகிய ஐந்து தேவிகள் காட்சி தருவது பூலோகத்தில் இத்தலத்தில் மட்டுமே காணக்கூடியது.

செயல் அலுவலர் நிர்வாகத்தில் அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்டு, பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில்.

பங்குனி மற்றும் சித்திரையில் பெருமாளுக்கு உற்சவம் நடைபெறும்.

மாசிமாதம் தெப்போற்சவம், வைகாசி, மாதம் ஆழ்வாருக்கு பத்துநாள் பிரம்மோற்சவம்.

இது தவிர நவராத்திரி உற்சவம், திருபவித்திர உற்சவம், வசந்த உற்சவம் ஆகியவை நடைபெறுகின்றன.

மார்கழி அத்யன உற்சவம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இங்கே சுவாமிகள் நம்மாழ்வாருக்கு, கண்ணனை யசோதைப் பிராட்டி உகந்து பலவித அலங்காரங்கள் செய்து கண்டுகளித்தாற்போல் பலவித அலங்காரங்கள் செய்வர்.

ஆலிலையில் தவழ்ந்த கிருஷ்ணன் திருக்கோலம், மோகினித் திருக்கோலம், ஆழ்வார் சயனம் என்பவை அவசியம் காண வேண்டியவை.

## ஆவுடையார் கோவில் பெயர்க் காரணம்

ஆவுடையார் கோவில் என்று ஏன் பெயர் வந்தது என்று தெரிய வேண்டாமா? மற்ற எல்லாச் சிவன் கோயில்களிலும் இல்லாத விசேஷம் ஒன்று உண்டு. மற்றக் கோயில்களில் எல்லாம் கருவறையில் லிங்கத் திருவுருவம் இருக்கும். அம்பிகை கோயிலுள் அம்பிகை நின்று கொண்டிருப்பாள். இந்தக் கோயிலில் மட்டும் ஆவுடையார் என்னும் பீடம் இருக்கும். லிங்கத் திருஉரு இருக்காது. அம்பிகை சந்நிதியிலும் அப்படியே. இறைவனுக்கும் இறைவிக்கும் உருவம் என்று ஒன்று இல்லை. கோயில்களில் சமைத்து வைத்திருக்கும் உருவம் எல்லாம் கலைஞன் கற்பனையில் உருவாக்கி நிறுத்தியவையே என்பதை அறிவோம். அந்த உண்மையை அழுத்தமாக விளக்குகிறது இந்தக் கோயில், இறைவன் திருப்பெயர் ஆத்மநாதர். இறைவி பெயர் யோகாம்பிகை. இருவரும் அந்தர்யாமியாகத்தான் இங்கு எழுந்தருளியிருக்கிறார்கள். இருவருக்கும் இருக்கும் பீடம் இருக்கிறது. அதற்கே அபிஷேக ஆராதனைகள் எல்லாம். அப்படிப் பீடமாகிய ஆவுடையார்க்கே முக்கியத்துவம் கொடுத்து, பூசை நடப்பதினால்தான் ஆவுடையார் கோயில் என்று வழங்குகிறது. இப்படி இறைவனும் இறைவியும் அருபமாக இருப்பதனால்தானோ என்னவோ இங்கு நந்தி கிடையாது. கொடி மரம் கிடையாது. சண்டீசரும் இல்லை.

— ''வேங்கடம் முதல் குமரி வரை'' நூலில்
**தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.**

இருபத்தேழு நட்சத்திரத்தை கருத்திற் கொண்டு நாலாயிர பிரபந்தமும் ஓதப்பட்டு வருகிறது.

சுவாமி நம்மாழ்வார் அவதரித்திராவிடில் வைஷ்ணவத்திற்கு மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கே பேரிழப்பு எனச் சொன்னால் அது மிகையாகாது.

நம்மாழ்வார் நான்கு வேதங்களையும் நான்கு பிரபந்தங்களாக அதாவது ருக், யஜுர், சாம, அதர்வணம் என்னும் வேதங்களைத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி எனும் பிரபந்தங்களாக நமக்குத் தந்துள்ளார்.

இவரையே மதுரகவி ஆழ்வார் ''தேவுமற்றறியேன்'' எனக் கொண்டு போற்றிப் பரவியுள்ளார்.

உலக இயற்கைக்கு மாறாகக் குழந்தையாய் உண்ணாமலும், உறங்காமலும் இருந்ததால் மாறன் என்றும், வேதம் தமிழ் செய்ததால் வேதம் தமிழ் செய்த மாறன் என்றும், பிற சமயத்தாரை அங்குசம் கொண்டு யானையை அடக்குவது போன்று தம் பிரபந்தம் கொண்டு அடக்கியதால் பராங்குசம் என்றும், வகுளமாலை தரித்ததால் வகுளாபரணன் எனறும் பல பெயர்களில் போற்றிப் புகழப்படுகிறார்.

வைணவம் தழைக்க அவதாரம் செய்த நம் சடகோபன் தாள் பணிந்து உலகம் உய்ய பிரார்த்திப்போமாக.

# கந்தவேள் கருணை

திருமுருக கிருபானந்த வாரியார்

**(25)**

தந்தையிடம் விடைபெற்றுத் தனது மாளிகைக்குவந்தபானுகோபன் போருக்குச் செல்வதற்கு ஆயத்தம் தொடங்கினான். தும்பை மாலை அணிந்து பல்வகைப் படைக்கலங்களை எடுத்துக் கொண்டு, இரண்டாயிரம் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிப் புறப்பட்டான். அவனது சேனைகள் சென்ற போது ஏற்பட்ட புழுதியினால் வீரமகேந்திரபுரமே மறைந்தது. பானுகோபன் கடலைக் கடந்து பூமி அடைந்தான். இடம் காட்டுவதற்காக உடன் இட்டு வந்திருந்த துன்முகியிடம், ''அசமுகி அத்தையின் கைகள் எந்த இடத்தில் வெட்டப்பட்டன'' என்று கேட்டான்.

துன்முகி அவனைச் சீர்காழி நந்தவனத்துக்கு அழைத்துச் சென்றாள். நந்தவனத்தில் புகுந்தான் பானுகோபன். அவனது சேனைகள் நந்தவனத்தை அழித்தன. நந்தவனமெங்கும் தேடிப் பார்த்த பொழுது இந்திராணியையோ வீரமகாகாளரையோ காணாததால் பானுகோபன் மிகவும் ஆத்திரம் கொண்டான். பூவுலகெங்கும் படை வீரர்களுடன் சென்று தேடினான். அங்கும் அவர்களைக் காண முடியவில்லை. நால்வகைச் சேனைகளுடன் விண்ணுலகம் சென்றான். அதனை அறிந்த தேவர்கள் அஞ்சியோடி இந்திரனின் புதல்வனாகிய சயந்தனிடம் சென்று படையெடுப்புச் செய்தியைத் தெரிவித்தனர். தேவர்களில் பலரும், தேவகுரு வியாழ பகவானும், தேவராஜனும விண்ணுலகில் இல்லாத சமயம் அது; எனினும் சயந்தன் அசுரர்களை எதிர்த்துப் போரிடுவது என்றே தீர்மானித்தான்.

''அசுரர்களிடம் புறங்காட்டி ஓடுவது நமது தன்மானத்துக்குத் தகாது. இவர்களிடம் அடிமைப் பட்டு உயிர்வாழ்வதைவிட எதிர்த்துச் சாவதே மேல். புறப்படுங்கள் போருக்கு'' என்று தேவர்களைத் தூண்டினான். அவர்களும் தங்களது அன்புக்குரிய இளவரசனுடன் உற்சாகமாக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்யலானார்கள்.

சிங்காதனத்திலிருந்து இறங்கிய சயந்தன் ஐராவதத்தை எண்ணியவுடன் அந்த திவ்வியமான வெள்ளையானை அவன் எதிரில் வந்து நின்றது. அதன் மீது ஏறிக்கொண்ட சயந்தன் தேவர்கள் புடை சூழப் போருக்குப் புறப்பட்டான்.


பானுகோபனின் சேனைக்கு எதிரே தேவர் படை அணி வகுத்து நின்றது. சமர் புரியாமலே அமரர் ஓடிவிடுவர் என்று எதிர்பார்த்த அசுரர்களுக்கு வியப்பாகிவிட்டது. ''நனறாயிருக்கிறது. நேற்று வரை நம்மிடம் ஏவல் செய்து கொண்டிருந்த தேவர்கள் இன்று நம்மை எதிர்த்துப் போர் செய்ய வந்து விட்டார்களே'' என்று ஆச்சரியமுற்று நின்றார்கள்.

இரு படைகளும் மோதிக் கொண்டன. இரு தரப்பினரும் வேற்படை, வாட்படை, சக்கரம், மழுப் படைகள், முத்தலைச் சூலங்கள், குலிசங்கள் முதலியவற்றைக் கொண்டு கடுமையாகப் போர் புரிந்தனர். உதிரம் வெள்ளம் போல் ஓடியது. நீண்ட நாட்கள் அடிமை வாழ்வு வாழ்ந்து இளைத்திருந்த வானவர்களால் அதிகார பலம் பெற்று மதர்த்திருந்த அசுர கணங்களுக்கு ஈடு கொடுப்பது கடினமாயிருந்தது. போர்க் களத்தினின்று தேவர்கள் ஓடலாயினர். ஓடிய தேவர்களை அசுரர்கள் துரத்திச் சென்று கயிற்றினால் கட்டிப் பானுகோபனிடம் இழுத்து வந்தார்கள்.

தேவர்கள் கயிற்றினால் கட்டி இழுக்கப்படும் கோரக் காட்சியை வெள்ளை யானை மீது அமர்ந்திருந்த சயந்தன் கண்டான். அவனுக்குத் தன் மானம் பொங்கியது. கோபம் மிகுந்தது. உடலிலுள்ள சக்தியை எல்லாம் வரவழைத்துக்கொண்டு வில்லை வளைத்து நாணை ஏற்றிப் பாணங்களை மழைபோல் பொழிந்தான். அதற்கு எதிராக அசுரர்களும் கோடிக்கணக்கில் பாணங்களை விடுத்தார்கள். தன்னை நோக்கி வந்த பாணங்களையெல்லாம் எதிர்ப் பாணங்களால் தவிடுபொடியாக்கினான் சயந்தன். கடும் போர் புரிந்து நூறு வெள்ளம் அசுரர்களையும் அழித்தான். பானுகோபனுடைய படைவீரர்கள் பலரை ஐராவதம் காலால் மிதித்து அழித்தது. மற்றும் சில வீரர்களைத் துதிக்கையால் வாரி வீசியது. சில வீரர்களைத் தந்தத்தினால் குத்திக் கொன்றது. சிலரை வாலினால் அடித்துக் கொன்றது.

அசுர வீரர்களின் தலைவன் நீலகேசன் சயந்தன் மீது நூறு பாணங்களை விடுத்தான். சயந்தனும் நூறு பாணங்களை விடுத்தான். அதனால் நீலகேசனின் கவசம் பிளந்தது. ஆத்திரமடைந்த நீலகேசன் பிறைமுக அஸ்திரத்தைச் சயந்தன் மீது விடுத்தான். இதனால் சயந்தனுடைய வில்லின் நாண் அறுந்தது. சயந்தன் நிராயுதபாணியாகிவிட்டான். அஸ்திரசஸ்திரமற்ற சயந்தன் மந்திரதந்திரங்களை நாடினான். பலவித மாயங்களைச் செய்து போரிட்டான். அந்த மாயங்களை எதிர்த்துப் போர் செய்ய வகையறியாது நீலகேசன் விழுந்து இறந்தான். எஞ்சியிருந்த அசுர வீரர்கள் பல திசைகளிலும் சிதறி ஓடினார்கள். சோமாசுரன் மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், வருணன், மாகதன் முதலியர்களின் மாயாவிப் போர்முறை யாவும் தேவராஜ குமாரனின் மந்திர பலத்துக்கு முன்னால் ஏதும் செய்ய இயலவில்லை.

அசுரவீரர்களின் தோல்வியையும், அவர்கள் மடிவதையும் சயந்தனின் ஆற்றலையும் கண்ட



பானுகோபன் சுக்கிராச்சாரியார் முன்பு தனக்கு உபதேசித்திருந்த மூல ஞான மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கினான். அதன் மூலம் சயந்தன் செய்யும் மாயைகளை அறிந்து அதற்கு எதிராகப் போர் செய்தான். சயந்தனின் மாய உருவங்கள் எல்லாம் மறைந்து விட்டன. சயந்தன் தன்னந் தனியாக ஐராவதத்தின் மீது அமர்ந்திருந்தான். அவனுக்கு அருகில் ஆர்த்துச் சென்றான். பானுகோபன், ''இந்திர குமாரா, நான் உனக்குப் பக்கத்தில் வந்தவுடனேயே உன் மாயா பலம் மறைந்து விட்டதெனில், என் வலிமை எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொள். பாலப் பருவத்திலேயே நான் பகலவனைச் சிறை புரிந்தவன். எப்படிச் சிறை வைத்தேன் என்று நீ கண்ணுக்கு நேரே உணருவதற்காக இப்போது உன்னையும் சிறையில் அடைக்கப் போகிறேன். ஆற்றல் இருந்தால் வா என்னுடன் போருக்கு'' என்று அழைத்தான். இதைக் கேட்டதும் சயந்தனுக்குச் சினம் பிறந்தது.

இந்திர குமாரனுக்கும் சூர குமாரனுக்குமிடையே கடுமையான யுத்தம் நடந்தது. ஒன்றுக்கொன்று நேர் எதிரான அசுர சக்திக்கும் தேவசக்திக்கும் உருவகம் தாங்கிய இளைஞர்களின் யுத்தம் அற்புதமாக இருந்தது. இருவருமே சளைக்காமல் ஒருவரை யொருவர் சாடிக் கொண்டார்கள். தேரிழந்து மறு தேர் ஏறிய பானுகோபன் சயந்தன் உடல் மீதும், ஐராவதத்தின் மீதும் சரமாரி பொழிந்தான். சயந்தன் மயங்கி வெள்ளை யானை மீது விழுந்தான். அவனது உடலிருந்து பெருகிய உதிரம் தண்ணென்று தன் மீது பட்டதும் விசுவாசம் மிக்க வெள்ளை வாரணமாகிய ஐராவதம் நிலைமையைப் புரிந்து கொண்டது. கடுஞ்சினம் கொண்டது. பானுகோபனுடைய தேர் மீது பாய்ந்தது. தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளையும், தேர்ப்பாகனையும் தாக்கி அழித்தது. தேரையும் ஓங்கித் தரையில் வீசி நொறுக்கியது. தேரிலிருந்த பானுகோபன் பூமியில் குதித்தான். வெகுண்டு ஐராவதத்துடன் போர் செய்தான். அவனது மார்பில் முட்டியது ஐராவதம். ஐராவதம் முட்டியதால் பானுகோபன் அழியவில்லை. மாறாக யானையின் தந்தங்கள் முறிந்தன. பானுகோபன் ஆவேசத்தோடு ஐராவதத்தின்துதிக்கையை ஒருகையினால் பிடித்து முறுக்கிக் கொண்டு மற்றொரு கையினால் திவ்விய கஜத்தை ஓங்கி அறைந்தான். குன்றமெனப் பருத்து நின்ற ஐராவதம் அடியின் பலத்தில் பாதியும், அடியுண்ட அவமானத்தால் பாதியுமாகத் தன் சக்தியை இழந்து அப்படியே தரையில் சாய்ந்தது. அதன் மீது மயங்கிக் கிடந்த சயந்தன் நிலத்தில் உருண்டு விழுந்தான். பூமி ஸ்பரிசம் பட்டதும் மயக்கத்தினின்று தெளிந்தான். நடந்தவற்றையெல்லாம் அறிந்தான். தனது ஆற்றல் அடங்கியொடுங்கிவிட்டது என்பதை உணர்ந்தான்.

அசுர வீரர்களின் தலைவர்கள் அசக்தனாகக் கிடந்த சயந்தனைச் சூழ்ந்து கொண்டு, ''அடியுங்கள்; உதையுங்கள்'' என்று கூச்சலிட்டார்கள். அவர்களை விலக்கிக் கொண்டு அங்கே வந்த பானுகோபன் ''இவனைத் துன்புறுத்தாமல் தேவர்கள் இருக்கும் சிறைக் கூடத்தில் கொண்டு போய் அடையுங்கள்'' என்று உத்தரவிட்டான். என்ன இருந்தாலும் அசுரர்களின் இளவரசன் அல்லவா? அவனிடம் ஓரளவு கௌரவ புத்தி இருக்கவே செய்தது.

அசுர வீரர்கள் கயிற்றினால் கட்டி ஏற்கனவே சிறை செய்யப்பட்டிருந்த தேவர் கூட்டத்தோடு இமையவரின் இளவரசனையும் சேர்த்து விட்டார்கள்.

வெற்றிகண்ட அசுரர்களின் வெறி முற்றியது. சொர்க்கம் எங்கும் சுற்றித் திரிந்த தேவர்களையும் அரம்பையர்களையும் பிடித்து வந்து பானுகோபன் முன்பு, அசுர வீரர்கள் நிறுத்தினார்கள். சொர்க்கத்தைக் கொளுத்திச் சாம்பலாக்கி மிகவும் மகிழ்ந்தார்கள். தேவர்கள் சிறைப்பட்டதையும் பொன்னுலகம் மயானமானதையும் கண்ட பானுகோபன் அளவிலா ஆனந்தமடைந்தான். அசுரர்களை அழைத்து ''நம்மை எதிர்த்த வானவர்களும், இந்திர குமாரனும் அடிமைகளாக எனக்கு முன்னே செல்ல, அவர்கள் கூறாமல் கூறும் வெற்றியின் உறைவிடமாக நான் அவர்களுக்குப் பின்னர் ஊர்வலம் வரவேண்டும்'' என்று ஆணையிட்டான். அதன்படி அசுரர்கள் தேவர்களையும் சயந்தனையும் இழுத்துக்கொண்டு முனனே சென்றார்கள். பானுகோபன் வெற்றி வீரனாக மகேந்திரபுரியை அடைந்தான்.

சிறைபட்ட தேவர்கள் சூரபன்மன் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். பெருமிதத்துடன் தனது போர்த்திறனைத் தந்தைக்கு விளக்கினான் பானுகோபன். சங்கற்பத்தைச் சிறப்புற நிறைவேற்றித் திரும்பிய மகனைச் சூரபன்மன் ஆரத் தழுவிக் கொண்டான். மகனை மகிழ்ச்சியுடன் கண்ட அதே கண்களால் அனலை உமிழ்ந்தபடி தேவர்களை நோக்கினான் சூரன். ''என் தங்கையின் கரம் வெட்டுப்பட்டதற்குப் பிரதியாக இவர்கள் எலலோருடைய கைகளையும் துண்டியுங்கள்'' எனறு காவலாளிகளுக்குக் கட்டளையிட்டான். வானவர்களின் கைகளையும் கால்களையும் காதுகளையும் அசுமுகியின் எதிரிலேயே வெட்டி மகிழ்ந்தனர் காவலாளிகள். ஆனால் என்னே அதிசயம்! தேவர்களின் அங்கங்களை வெட்ட வெட்ட தவ வலிமையால் அவர்களுக்கு அங்கங்கள் மீண்டும் வளர்ந்தன. சூரபன்மன் பழிக்குப் பழி வாங்க முடியாது என்று கண்டான்.

தேவர்களுக்கும் தேவராஜ குமாரன் சயந்தனுக்கும் விலங்கு பூட்டினர். சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதன் பின்பு அவர்கள் அனுபவித்த இழி வாழ்வு காரணமாக தேவர்கள் தாங்கள் ஏன் முன்பு அமுதம் அருந்தினோம் என்றே வருந்தலானார்கள். இப்போது அசுரரிடம் தோல்வியுற்றதற்குப் பதில் அமுதம் கடையும்போதே அவர்களிடம் தோற்றிருக்கலாகாதா என்று எண்ணினார்கள். தேவர்கள் அமிர்தம் உண்டிருந்ததால் மரணத்தை வென்றுவிட்டார்கள். இப்போது அற்பரும் கயவருமான அசுரர்களிடம் கொடுங்கோன்மைக்கு ஆளாகி அடிமை புரிந்த அமரர்கள் சாவையே வரவேற்றனர். ஆனால் அமுதமுண்டவர் எப்படிச் சாக முடியும்.?

அங்கே போர்க்களத்தில் பானுகோபனின் தாக்குதலால் மயங்கிவிழுந்த ஐராவதம் அறிவுதெளிந்து எழுந்தது. அசுரர் வசமாகி அழிந்து போன அமராவதிக்குள் நுழைய அதன் கம்பீரமான கால்கள் கூசின. பதவி போன பின் பரமன் நினைவு மிகுந்தது. பரமன் நினைவு வந்தால் தமிழ் மண்ணின் நினைவு வரும். திருவெண்காடு என்ற திவ்விய ஸ்தலத்தை ஐராவதம் அடைந்தது. அங்கு எம்பெருமானைச் சிவாகம விதிப்படி பூசித்தது. சிவபெருமான் திருவருளால், முன்பு இழந்த கோடுகளைத் திரும்பப் பெற்றது. திருவெண்காட்டிலேயே தங்கி விட்டது.

அயிராணியுடன் மேரு மலையை அடைந்த இந்திரன சொர்க்கம் எரியுண்டதையும் சயந்தன் சிறைப்பட்டதையும் அறிந்து துடிதுடித்தான்.

சிவபெருமானை நோக்கி நெடுநாட்கள் தவம் புரிந்தான். தேவர்களின் சிவாபசாரக் குற்றம் நீங்கும் தருணம் வந்தது. தருணேந்து சேகரப் பெருமான் தரிசனம் தந்தார். தமது தேமதுரத் திருவாய் திறந்து ''நாம் உமையை மணந்து ஒரு குமாரனைத் தருவோம். அவன் அசுரர்களை அழித்து உங்களுக்கு வாழ்வு தருவான்'' என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

பின்னர் நடந்ததெல்லாம் நாமறிவோம். எனினும், எல்லாமறியும் சர்வக்ஞராம் சண்முகநாதன் அறியாதது போல் மாயம் செய்ததால் செவ்வேட் பரமன் செந்திற்கரையில் எழுந்தருளியிருக்க அசுர உற்பத்தியிலிருந்து தொடங்கி வரலாற்றினை விரித்துரைக்க வியாழ பகவான் தொடர்ந்து கூறுவார்.

விஷ்ணு, பிரமன், தேவர்கள் முதலியவர்களுடன் இந்திரன் ஆலோசனை நடத்தி மன்மதனைச் சிவபெருமானிடம் அனுப்பினான். பெருமான் மீது மலர்க்கணை விடுத்த மன்மதன் எரிந்து சாம்பல் ஆனான். இதனைக் கண்டு கலங்கிய தேவர்கள் தங்களை இனியும் சோதிக்கலாகாது என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டனர். ஐயனும் உளம் குழைந்தார். பார்வதி தேவியை மணந்த பரமேசுவரர் தேவரீரைத் தமது நெற்றிக் கண்களினின்றும் தந்தருளினார். தாங்கள் திரு அவதாரம் செய்த பின்பே இந்திரனும் பிரம்மவிஷ்ணுக்களும் மற்ற வானவரும் முனிவரும் புத்துணர்ச்சி பெற்றனர். ஆயினும் அவர்கள் துன்பம் முழுமையாகத் தீராமல் சூராதியவுணரின் ஆட்சியே இன்னமும் நடைபெற்று வருகின்றது. அவர்களை அழிக்கத் தங்களையன்றி வேறு எவராலும் இயலாது. ஆகவே தாங்கள் விரைவிலேயே நல்ல சுரர் வாழ வல்லசுரர் மாய அருள்புரிய வேண்டும்'' என்று வியாழ பகவான் கந்தக் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டார்.

வியாழபகவானின் முதுகைத் தமது திருவிரல்களால் தடவிக் கொடுத்து அருள் புரிந்தார் குமாரசுவாமி.

''எம்பெருமானே, தேவரீர் அந்தச் சூரனை அழிக்க வேண்டும் என்று திருவுளம் கொண்டால் நொடிப் பொழுதில் அவ்வண்ணமே நடந்து விடும். ஆயினும், தேவரீர் ஒரு திருவிளையாடலை எண்ணி இங்கு எழுந்தருளியிருக்கின்றீர்கள்'' என்றார் வியாழ பகவான்.

கந்தவேள் தமது காந்தக் கண் ஒளியைத் தேவராஜனிடம் திருப்பினார். ''அமரபதீ, துயர் வேண்டாம். தேவர்களைச் சிறை மீட்டு விண்ணுலக ஆட்சியைப் பழையபடியே உனக்குத் தருவோம்'' என்று வாக்களித்தார் சத்திய ஸ்வரூபமான சக்தி குமாரர்.

—(தொடரும்)

— — o — —


சித்திர பாரதம்
கதை வடிவம்: செவ்வேள்
படம்: M.N. ராஜா
அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் இறந்த செய்தியை பாஞ்சால மன்னன் துருபதன் நம்பவில்லை
திட்டதுய்மா! திரௌபதியின் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய். அர்ச்சுனன் நிச்சயம் வருவான்.
சுயம்வர ஓலை கிடைத்ததும் துரியோதனன் கர்ணன், சராசந்தன், பகதத்தன், சிசுபாலன் சல்லியன் முதலானோர் பாஞ்சாலம் வருகிறார்கள் பாண்டவர்களைக் காணும் ஆவலில் கண்ணபிரானும் பலராமனுடன் வருகிறார்.
வேத்திரகீய மறையவர்கள் திரௌபதி சுயம்வரம் காணப் புறப்பட, மறையவர் வேடத்திலிருக்கும் பாண்டவர்களும் பாஞ்சாலம் வருகிறார்கள். குயவர் ஒருவர் வீட்டில் குந்தியைத் தங்க வைக்கிறார்கள்.
அர்ச்சுனனைக் காணாமலேயே காதல் கொண்டுவிட்ட திரௌபதி சுயம்வரத்திற்கு அர்ச்சுனன் வருவானோ மாட்டானோ எனக் கலங்கத் தோழியர் தேற்றி அழைத்து வருகிறார்கள்.
வேந்தர்களே! உங்கள் வீரத்திற்கொரு போட்டி இங்கு வைக்கப்பட்டிருக்கும் மாபெரும் வில்லை ஏந்தி, நாணேற்றி இயந்திரச் சக்கரத்திற்குள் பொருத்தப்பட்டு மேலே சுழன்றுக்கொண்டிருக்கும் இலக்கைக்கீழே நீரில் தோன்றும் பிம்பத்தைப் பார்த்து யார் அடித்து வீழ்த்துகிறார்களோ
அவருக்குத் திரௌபதி மணமாலை சூட்டுவாள்.



மலைபோன்ற வில்லைத் தூக்கி நாணேற்ற முடியாமல் சல்லியன், பகதத்தன், சராசந்தன், நீலன். துரியோதனன் முதலான பலரும் தோற்கின்றனர்.
கர்ணன் நாணேற்ற முற்படு
மறையவர்களோடு நின்றிருக்கும் அர்ச்சுனன்,
மறையவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்ளலாமா?
திட்டதுய்மனும்,
யாவராயினும் வீரம் மிக்கார் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம்.
அர்ச்சுனன் வில்லை எளிதாக எடுத்து நாணையும் பூட்டி இலக்கைக்குறி தவறாது அடித்துத்தள்ள மறையவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள்.
வேந்தர்களே! நம்மில் ஒருவருக்கு கிடைக்காத திரௌபதியை மறையவன் மணம் கொள்ள நாம் விடக்கூடாது. அவனைக் கொல்லுங்கள்
துரியோதனன் தூண்ட சல்லியன் கர்ணன் முதலானோர் அர்ச்சுனனோடு போருக்கு வருகிறார்கள்.
அய்யோ
ஊ
அவர்களெல்லோரும் தோற்று ஓட கண்ண
பிரான் தலையிட்டுப்போரை விலக்குகிறார்.

# ஆனந்த நடனம் ஆடினார்

**'நடராசன் அடிமை'**

வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் தாயின் வரவு நோக்கும் கன்றைப் போலவும், மழையை எதிர் பார்க்கும் சாதகப் பறவைகளைப் போன்றும் மேக மூழக்கத்தை எதிர் நோக்கும் மயில்கள் போன்றும் இறைவனது நடனத்தைக் காணும் நன்னாளை எதிர் நோக்கியிருந்தனர். இறைவன் குறித்த நாளான தை மாதம் வியாழக்கிழமை பூச நட்சத்திரம் கூடிய நன்னாளும் வந்தது.

வென்றிகொல் அந்நாள் முன்னாள் வெய்யவன் விரைந்து வெள்ளிக்<br>
குன்றினை நண்ணி அண்ணல் கூத்தயர்தர அகன்றான்<br>
என்றமை அறிந்தான்போல் அங்கு இராவழி போந்து தில்லை<br>
ஒன்றிய கடல்மால் தோன்றி எழுந்து வந்து உச்சியுற்றான்

திருக்கயிலையிலிருந்து புறப்பட்டுத் தன் அடியவர்கட்கு ஆடும் திருக்கூத்தின் ஆனந்த காட்சியைக் காட்ட இறைவன் சிதம்பரம் வந்து விட்டார் என்பதையறிந்து சூரியன் தானும் சிதம்பரத்தில் தோன்றினான் என்கிறார் கவிஞர்.

திருக்கயிலாய மேய சிவபிரான் வந்தான்! தெய்வ<br>
மருக்குழல் இமையவல்லி மணமகன் வந்தான்!வேத<br>
உரைக் கடங்காத சீர்த்தி உம்பர்தம் பெருமான் வந்தான்!<br>
கருப்பிறவியின் ஆன்மாவைக் கடப்பிக்கும் கடவுள் வந்தான்!

மந்திரம் ஐந்து மேனியாகினோன் வந்தான் வந்தான்!<br>
அந்தமில் எழுத்து ஐந்தான அண்ணல் தான் வந்தான்! வந்தான்!<br>
பந்தமதகற்றியாளும் பராபரன் வந்தான்! வந்தான்!<br>
வந்தனன் சம்பு என்னா எழுந்தது வானமீதே.

என ஆகாயத்திலிருந்து கட்டியம் கூறும் ஓசை கேட்டது. பூமியிலிருந்து (பிரிதிவி) உண்டான மரம் முதலானவற்றால் செய்யப்பட்ட மத்தளம், முழவு முதலான வாத்யங்களும், தண்ணீரிலிருந்து (அப்பு) உண்டான சங்கு முதலானவைகளும், நெருப்பில் (தேயு) சுடப் பெற்று உருவாக்கப் பெற்ற சின்னம், தாளம் முதலானவைகளும் காற்றின் மூலம் (வாயு) முழங்கக் கூடிய வாத்யங்களான புல்லாங்குழல், நாதசுரம் முதலானவைகளும்,ஆகாயத்துடன்நேராகக் கலக்கக் கூடிய வாய்ப்பாடல்கள் வேத முதலான ஒலிகளும் எழுந்தன. ஐம்பெரும் பூதங்களும் ஐயனது ஆட்டத்தில் ஒலித்து உய்ந்தன என அழகாக வர்ணிக்கப்படுகிறது. இத்துடன் இறைவனின் சிலம்பொலியும் கேட்டது.

நடனம் காண்பதற்காக அங்கு வந்த ஆறைஞ் ஞூறு தவ முனிவர்களும் (இவர்களே தில்லைமூவாயிரவர் என அழைக்கப்படுகின்றவர்.) மற்றோரும் ''இறைவனே! நடனக் காட்சியருளுக'' எனத் துதித்து வேண்டினர். வியாக்கிரபாதர் - பதஞ்சலி இருவரும் ஞானக் கண் அருளப் பெற்று, நடன தரிசனம் செய்யலாயினர்.

''ஊன்றிய திருவடியும், ஆடிய நிலையில் அழகிய மற்றொரு திருவடியும், அவைகளிற் சிலம்பும், ஒளி மிகுந்த திருமேனியும், அழகிய துடைகளும் அவற்றில் சுற்றப்பட்ட புலித்தோலும், கச்சாக உதர பந்தனமும், திரு நூல் மார்பும், வீசிய அபயம் காட்டிய கரங்களும், டமருகம் - அக்னி ஏந்திய கரங்களும், நீலகண்டமும் தோடும் குழையும் பொருந்திய செவிகளும் (அம்மையப்பராகக் காட்சியளித்தாகக் குறிப்பு), புன் சிரிப்பும் அழகிய கண்களும், அம்மையை ஒரு புறம் காண்கின்ற பார்வையும் (வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க என் பார் பட்டினத்தார்)திருநெற்றியும், சடைக்கற்றையும், பாம்பும் கொன்றை மாலையும், கங்கை சுமந்த திருமுடியில் சந்திரனும், வெண்ணீறணிந்த திருக்கோலமுமாக நடனக் காட்சி கண்டனர் என்பதை தன் மந்திரக் கவிதையால்

''வலத்திருவடிப் போதாய் தன் முயலகன் முதுகின் மன்னி<br>
நிலைத்திட, வாமபாதம் உயர்ந்து குஞ்சிதமாய் நேர<br>
நலத்துடன் இடக்கை வாம பாத நேர் குறுக்கே நண்ணப்<br>
பலத்துடன் வலக்கையாணர் அபய முத்திரை பரிக்க''

என்று வர்ணிக்கிறது சிதம்பர சபாநாத புராணம். ''இருண்ட கூந்தலையுடைய அம்மை திருமுடியில் மலர்சூடி, நெற்றியில திலகமிட்டு, விற் போன்ற புருவத்துடன், வேல் போன்ற விழிகளால், புன் முறுவல் கொண்டு அழகிய திருக்கழுத்தில் மங்கல நாண் பூண்டு, பச்சைத் திருமேனியில் பல விதமான ஆபரணங்கள் பூண்டு இறைவனது இடப்பக்கத்தில் நின்று சிவகாமசுந்தரி எனப்பெயருடன் நர்த்தனக் காட்சி கண்டு களித்தாள்'' என அம்மையின் தோற்றம் கூறபபடுகிறது.

ஆயிர கோடிசூரியர்களின் ஒளிபோன்று பிரகாசமாக விளங்கும் ஞான சபையில் பிரம விட்டுணுக்களுக்குக் கிடைக்காத காட்சியை நம் போன்றவர்களும் கண்டு களித்தனர். வியாக்ரபாதர் - பதஞ்சலி இருவரும் இவ்வழகிய அருட்காட்சி கண்டு மகிழ்ந்து பிரமித்து இறைவனின் கருணையை வியந்து போற்றினர்.

பரமபத! கங்காதர! அரவிந்தாசனன் உச்சிச்<br>
சிரமெரி கண்டா! இருள்தரு கண்டா! மிகுதெவ்வர்<br>
புரமெரி கண்டா! பவமிரி கண்டா! எனஓதிக்<br>
கரமலர் சிந்தா அரஹர என்றார் கணநாதர்.

மாலயன் மேலா! வாசவநேசா! மதியே செங்<br>
கோல நிலவா! பாலனநீறா! கோவே! திண்<br>
காலனை இலாவாகாதிய காலா! கதியே! வண்<br>
பால நிலாவா! காவென நேரே பணவுற்றார்.



நடனம் கண்டு பலர் இவ்வாறு புகழ்ந்து ஏத்த இறைவன் வியாக்கர-பதஞ்சலிகளை நோக்கி ''உங்களுக்கு என்ன வேண்டும்''? என்று கேட்டனர். ''என்றும் தங்களுக்குக் குறைவறப் பூசை செய்து கொண்டே இருக்க வேண்டும். வேறேதும் வேண்டாம்'' என்றனர் வியாக்ரபாதர். பதஞ்சலி 'எம் பெருமானே! இந்த நடனமாடிய நிலையிலேயே நின்று உலகில் யாவரும் இந்த ஆனந்தக் காட்சி கண்டு எம்மைப் போல் மகிழ அருள வேண்டும்'' என வரம்கேட்டார். தான்பெற்ற இன்பம் யாவரும் பெற வேண்டும் என்பது பெரியோர்களின் கொள்கையன்றோ! பதஞ்சலியின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன் நடனக் காட்சியளித்து நடராசப் பெருமான் என இன்றும் விளங்குகின்றார்.

இறைவனின் கட்டளையால் தேவர்கள் பொன் கொண்டு அவ்விடத்தில் கோயில் கட்டினர். அது பொன்னம்பலம் எனப் பெயர் கொண்டு இன்றும் விளங்குகிறது. பிரமன் முதலான தேவர்கள், வியாக்ரபாத பதஞ்சலிகளை நோக்கி ''உங்களால் எங்களுக்கும் இந்த ஆனந்த நடனக் காட்சி கிடைத்தது. உங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறோம!'' எனக் கூறி மகிழ்ந்தனர்.

பூவமர்வோனும் பொருகடலோனும் புத்தேளும்
தேவர்கள் கோனும் திருமுனிதானும் திகழ்நாகக்
காவலனே! இக்கருணை நடங் காண வரவைத்
தாய்க்கு
ஏவல் செய்வோம்! மற்றென் செயவல் லோம்
என்றார்கள்.

அத்தகைய திருநடனம் காண இக்கலியுகத்தில் நாமும் பேறு பெற்றுள்ளோம்! எல்லாம் சிவகாமவல்லி சமேத நடராஜப் பெருமானின் கருணையே! அவர் திருவடிகளே நமக்குச் சரணம்.

கங்கை நதிக் கரையில் பிரமதேவன் ஒரு யாகம் செய்ய ஆரம்பித்து, அக்கினியில் ஆகுதி கொடுத்து ஒவ்வொரு தேவதையாக அழைக்க எந்த தேவதையும் வரவில்லை. இதன் காரணத்தை பிரமதேவன் விசாரிக்க ''எல்லாத் தேவர்களும் சிதம்பரத்தில் கூடியுள்ளனர்.'' என்பதை அறிந்து, நாரதரைச் சிதம்பரம் சென்று எல்லாத் தேவர்களையும் அழைத்து வருமாறு அனுப்பினார். நாரதர் சிதம்பரம் வந்து தேவர்களை அழைக்க ''ஆனந்த நடராசப் பெருமானின் அழகிய கோலம் கொண்டு ஆனந்தித்து, தேன் குடித்த வண்டுபோல, களித்திருக்கும் எமக்கு அந்த இன்பத்தை நீங்கி வர இயலாது. நாங்கள்இங்கிருந்து ஆகுதிகளை அக்னி தேவன் மூலமே ஏற்றுக் கொள்கிறோம். அக்னியிலேயே ஆகுதி செய்யச் சொல்லுங்கள்'' என்றனர். நாரதர் மூலம் இச்செய்தியை அறிந்த பிரமதேவர் நேரில் சிதம்பரம் வந்து, தேவர்களை அழைத்ததுடன் ''யாகத்தை கங்கையின் கரையில் நடத்துகிறேன். எல்லா இடங்களிலும் அந்தணர்கள் உண்டு. எனினும் எந்நேரமும் நடராசப் பெருமானை உபதேசித்து வணங்கும் தில்லை மூவாயிர முனிவர்கள் எங்கும் கிடையாது. எனவே எனது வேள்வியை நன்கு நிறைவேற்ற தேவர்களையும் தில்லை மூவாயிர முனிவர்களையும் கங்கை நதிக் கரைக்கு அனுப்பி வைக்க வேண்டும்'' என வியாக்ர பாதர் பதஞ்சலியான இரு முனிவர்களையும் வேண்டினார்.

வியாக்கிரபாதர் தானே எல்லாப் பூசைகளையும் சிதம்பரத்தில் கவனித்துக் கொள்ளுவதாகவும், கங்கா நதிக்கரைசென்று பிரமதேவனின் யாகத்தை நன்கு நடத்தி வருமாறு தில்லை வாழந்தணர்களை வேண்டினார். அவரதுஅன்புக்கட்டளையை மறுக்க முடியாத தில்லை வாழந்தணர்கள் பிரமதேவனது யாகத்தை நடத்திவைப்பதற்காகக்கங்கைக்கரைக்கு வந்தனர். தில்லை மூவாயிரவர் என்று திரும்பி வருவார்களோ என ஏக்கத்துடன் வியாக்ரபாதரும் பதஞ்சலியும் சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்குக்காலம் தவறாமல் நித்ய பூசைகளை நன்கு நடத்

திக் கொண்டிருந்தனர். அடியார்களுக்குத் தமது அன்பர்களான மற்ற அடியார்களைப் பிரிவது என்பது தாயைப் பிரிந்த சேயின் துயரம் போன்ற தன்றோ.


சென்றபின் அந்தத் திருமுனியும் சீர் அரவோனும் பின்திகழ் வேணிப் பிஞ்ஞகன் மன்றம் பிரியாத ஒன்றிய சிந்தைத்தாபதர் மீள்வுற்று உடன்வாழ்வது என்று கொலோ வந்திடு நெறி ஏதோ என நொந் தார்

தில்லை மூவாயிரவர் அன்றும் இன்றும் என்றும் நடராசப் பெருமானே உயிர் எனஎண் ணும் தன்மையுடையவர். உலகத்தவருக்கு அவர் களில் சிலர் ஏழையாகக் காணப்படலாம். ஆனால் இறைவனான தில்லை நடராசப் பெருமானான செல்வனின் திருவடிகளை அனுதினமும் வணங்கு குவதே பெருஞ் செல்வம் என்ற கொள்கையை உடைய நேசச் செல்வர்கள் அவர்கள். அதை விளக் கும் சம்பவம் ஒன்று நடந்தது.

அனுதினமும் நடுப்பகலில் உச்சிக் காலப் பூஜை யில் நடராஜப்பெருமானைத் தரிசித்துவிட்டுத்தான் உணவு கொள்ளுவது தில்லை வாழ்அந்தணர்களின் வழக்கம். கங்கைக் கரையில் யாகம் நடைபெற்ற போது நடுப்பகல் உணவுக்காக, யாகத்தை நிறுத்தி அனைவரையும்உணவுண்ண அழைத்தனர். தில்லை நாயகனான நடராஜப் பெருமானைப் பிரிந்து வேதனை கொண்டிருந்த மூவாயிரவரான அவ்வந் தணர் பெருமக்கள் ''நடராசப் பெருமானைத் தரி சிக்காமல் எங்களால் உணவு கொள்ள முடியாது'' என மறுத்தனர். வேள்விக்கு வந்த விருந்தினர்கள் வேள்வி முடியுமட்டும், அதுவும் எத்தனை நாட் களாகுமோ, அது வரை உணவில்லாமலிருந்தால் அது அடியார்களுக்குச் செய்யப்பட்ட குற்றமாகி விடுமே என அஞ்சிய பிரமன், நடராஜப் பெரு மானை நினைத்து, வேள்வித் தீயில் நெய் கொண்டு ஒரு முறை ஆகுதியளிக்க, வேள்வித் தீயினின்றும் விலைமதிக்க முடியாத மாணிக்க மணியால் செய் யப்பட்ட ஒரு நடராசப் பெருமானின் வடிவம் தோன்றியது. தில்லை மூவாயிரவர் அம்மூர்த்தியை தரிசித்து உணவுண்டனர். வேள்வி முடிந்ததும் பிரம்மனால் அளிக்கப்பட்ட அந்தத் திருவுருவத் தையும் தில்லைக்கு கொணர்ந்து திருக்கோயிலில் பூசிக்கலாயினர். அத் திருவுருவிற்கே இரத்தின சபாபதி எனப் பெயர் விளங்குகின்றது. ***

---

# ஆலய



# விளக்குகள்

தமிழ்நாட்டு ஆலயங்கள் ஒலி-ஒளி அமைப்பில் சிறப்புப்பெறுகின்றன. வழிபாட்டுக் காலத்தை அறிவிக்கும் வெங்கல மணியும், அலங்கார தீப வழிபாடும் நம் உள்ளத்தை கொள்ளை கொள் கின்றன. இந்த மணியும் விளக்கும் எங்குத் தயாரா கின்றன தெரியுமா ?

கும்பகோணம் அருகே நாச்சியார் கோவில் என்ற ஊரில் சுமார் 300 குடும்பங்கள் இத்தொழி லைக் குடிசைத் தொழிலாகச் செய்கின்றன.

தஞ்சை மாவட்டத் தொழில் இயக்குநர் இத்தொழிலுக்கு ஆதரவு கொடுத்து விற்பனைக் கும் ''பூம்புகார்'' மூலம் ஏற்பாடு செய்கிறார். ரிஷபதீபம், நாகதீபம், ஆரத்தி, ஐந்தடுக்குத்தீபம், ஐந்து கிளை தீபம் முதலியன செய்யப்படுகின்றன. கலைஞர்களுக்கு 2 ஆண்டு பயிற்சியும் அளிக்கப்படு கிறது. காஞ்சிபுரம், ஆயக்குடி, மதுரை, வாகைக் குளம் ஆகிய இடங்களிலும் பயிற்சி மற்றும் உற் பத்திக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாச்சி யார்கோயில் மையத்தில் ஆண்டுக்கு 30 இலட்சம் மதிப்புள்ள விளக்குகளும், மணிகளும் தயாராகின் றன. திருப்பதிக் கோவிலுக்கு 1008 விளக்கு நிறைந்த பித்தளைக் கதவும் இங்கு செய்யப்பட் டது. மேலும் பக்தர்களை வரிசையில் ஒழுங்கு படுத்த பித்தளைச் சட்டங்களும (15 இலட்சம் மதிப்பு) இங்கு தயார் செய்யப்பட்டுள்ளன.

பித்தளை விளக்குகள் செய்ய 55 சதம் செம்பும், 44சதம் துத்தநாகமும், 3 சதம் எஃகும், 3 சதம் அலுமினியமும் சேர்க்கப்படுகின்றன சுமார் 1700 டிகிரி ஃபாரன் ஹீட் வரை சூடேற் றப்படுகின்றன. உருகிய கலவை அச்சுக்களில் வார்க்கப்பட்டு, வண்டல் மண் நிறைந்த் பெட்டி களில் வைக்கப்படுகின்றன. ஆற்றப்பட்டு பிறகு மெருகு ஊட்டப்படுகிறது. மணி செய்ய 80 சதம் செம்பு, 20 சதம் தகரம் கலந்த வெண்கலம் பயன்படுகிறது. 1 கிலோ முதல் 400 கிலோ கிராம் வரை, நிறையுள்ள மணிகள் செய்யப்படுகின்றன நாச்சியார் கோவில் மணிகள் தரத்தில் சிறந்தவை.

**என். ஆர். இலக்குமணன்,**
**கல்லிடைக்குறிச்சி.**

# தைப்பூசத் திருநாள்

சீ. வசந்தி, அகழாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28.

தைத்திங்கள், தமிழ் மக்கள் மன மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இனிய மாதம். மனித உழைப்பிற்கேற்பப் பயனை அடையும் நல்ல திங்கள். இம்மாதத்தின் தொடக்கத்திலேயே விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தை மாதத்தில் பொங்கல் திருவிழாவிற்கு அடுத்துச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது, தைப்பூசத்திருநாள், இந்நாளின் வீழாக் கொண்டாட்டங்களைப் பற்றி இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் விரிவாகக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களில் தைத்திங்களில் நீர்த்துறைகளில் மகளிர் விளையாடிய செய்தி கூறப்பட்டுள்ளது. மகளிர் நீராடும் குளம் பற்றி ஐங்குறுநூறும், நற்றிணையும் இயம்புகின்றன. மார்கழி நோன்பாகிய தைந்நீராடல் வளர்பிறையில் தொடங்கியதாகப் பரிபாடல் சுட்டுகிறது.

''ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந்திங்கள் மறுநிறை யாதிரை
விரி நூலந்தணர் விழவு தொடங்கப்
புரி நூலந்தணர் பொலங்கல மேற்ப''

எனக் கன்னிப் பெண்கள் நல்ல கணவரை அடைதல் வேண்டி தைந் நீராடலாகிய நோன்பு தங்கள் தாய்மார்களுடன் நோற்றனர். தைப்பூச நன்னாளில் இறைவனை வேண்டி வழிபட்டு நோன்பினை முடித்து நல்ல கணவனைப் பெறுவர்.

தமிழகத்தில், பல்வேறு ஊர்களில் இறைவனை வழிபட்டுப்பின்னர், ஆளுடைய பிள்ளையான, ஞானசம்பந்தர் திருமயிலையை அடைகிறார். திருமயிலையில், சிவநேசர் என்பவரின் மகள் பூம்பாவை அரவம் தீண்டி இறந்து விடுகிறாள். சிவநேசரின் வேண்டுகோளுக்கிணங்கி, பூம்பாவையை உயிர்ப்பிக்கும் போது, பாலறாவாயர், தைப்பூசத் திருவிழாக் கொண்டாட்டம் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் பாடல் பின்வருமாறு:

''மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரமர்ந்தான்
நெய்ப்பூசு மொண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்''

எனப்பாடியுள்ளார். இதன் மூலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தைப்பூசத் திருநாளை இளமகளிர், நேரிழையார் கொண்டாடினர் என அறியமுடிகிறது.

தமிழகத்தில், கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களிலும், தைப்பூசத் திருவிழாப் பற்றிய செய்தி சிறப்பாகப் பேசப்படுகிறது. திருவிடைமருதூர் கோயிலில் தைப்பூசத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டதை மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மனான, பராந்தகனின் இரண்டு கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறது. இக்கல்வெட்டுக்களில் இவ்விழா காலத்தில் விளக்கெரிக்க 91 ஆடுகளும், விளக்கும் அளிக்கப்பட்ட செய்தி அறியப்படுகிறது. இதே கோயிலில், தைப்பூசத் திருநாளில் கூத்து நிகழ்த்துவதற்காக விளங்குடியில் ஒரு வேலி நிலம் அளிக்கப்பட்டதைக் கல்வெட்டுக் கூறுகிறது. இதிலிருந்து தைப்பூசத்தன்று இக்கோயிலில் கூத்து நிகழ்ந்ததை அறியமுடிகிறது. அத்துடன் நில்லாமல் 'திருத்தைப் பூசத்துக்கும், திருப்பங்குனித் திருநாள் தீர்த்தத்துக்கும் அமுதுபடிப்புறமும், திருநந்தவனப்புறமும் வழங்கப்பட்ட செய்தி தெரியவருகிறது.

திருமழபாடியில் உள்ள கல்வெட்டொன்றின் மூலம், தைப்பூசத்தன்று திருமழப்பாடி இறைவன் காவிரியாற்றில் எழுந்தருளிய செய்தியும், இதற்காக காவிரியாற்றில் திருமண்டபமும், திருக்காவணமும், (சோலையும்) அமைக்கப்பட்ட செய்தியும், இவ்விழாவிற்காக இறைவனுக்கு நைவேத்தியத்திற்காகவும், திருஅலங்காரத்திற்காகவும், சமைத்தகறி உணவிற்காகவும் (வெஞ்சனத்திற்கு) பணம் மற்றும் நெல் இறையிலியாக அளிக்கப்பட்ட செய்தி அறியப்படுகிறது. தற்காலத்தில், கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டபம் மற்றும் நந்தவனம் ஆகியவைக் காணப்படவில்லை. ஆயினும் தைப்பூசத்தன்று மட்டும் இறைவன் மடவளாகத்தின் வழியாக உலாவருகிறார்.

மற்றொரு கல்வெட்டில் ''அரிசிநாற்கலனெ தூணிப் பதக்குத் திருத்தைப்பூசம் திருப்பாவாடை அமுது செய்தருள சீ பண்டாரத்திலே அளப்பவும்'' எனக்குறிப்பிடப்பட்டுள்ளதால், தைப்பூசத்திருநாளில் திருப்பாவாடை (ஆடைமேல் கோயில் மூர்த்திக்குப் படைக்கும் நிவேதனம்) அமுது செய்தல் சிறப்பாக நடைபெற்ற செய்தி அறியமுடிகிறது. பராந்தகப் பாண்டியனின் மெய்க்கீர்த்தியிலும் ''தைப்பூசப் பிற்றை ஞான்று, வந்திருந்தாரெல்லார்க்கும் மாற்றாதே தியாகமிட'' எனப்படுவதால் தைப்பூசத் திருநாள் சிறப்பு அறியப்படுகிறது.

தைப்பூசத்திருநாள் சிவனுக்கு உகந்தநாள், ஆதிசேடன், பதஞ்சலியாகப் பிறந்து, இறைவனது திருநடனத்தைக் காண வேண்டி, நின்றபொழுது இறைவன் தில்லை வனத்தில் (சிதம்பரத்தில்) தை மாதம் வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் நர்த்தனக்காட்சி அளிப்பதாகக் கூறிய செய்தியின்மூலம் தைப்பூசத்தின் சிறப்பு அறியப்படுகிறது.

தைப்பூசத் திருநாள், இறைவனுக்கும் மட்டுமின்றி, அவனை நினைந்து, உருகி வழிபட்ட அடியார்களுக்கும் சித்தர்களுக்கும் உகந்தநாள். இராமலிங்க அடிகளார் ஜோதிவடிவாகி இறைவனுடன் கலந்தார். அவரின் திருக்கோயிலிலும் தைப்பூசம் சிறப்பாகப் போற்றப்படுகிறது. தைப்பூச நன்னாளில், நாமும் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டு அனைத்துச் செல்வங்களையும் பெற்று இன்புறுவோம்''

# கம்பரின் இராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம் [15]


இராமர் வனம் புகுவார் என்ற செய்தி காட்டுத்தீ போல் வேகமாகப் பரவ, அதைக் கேட்கும் மக்கள் சூறாவளியில் சிக்கி வேரோடு சாயும் பெரு மரங்கள் போல் சாய்கிறார்கள். கூட்ட நெரிசலுக்கு அஞ்சிப் பட்டாபிசேகம் காணவராமல் வீடுகளிலே இருக்கும் வயதுமுதிர்ந்த பெரியோர்களும், வயதில் குறைந்த குழந்தைகளும் கூட இராமர் வனம்புகும செய்தி கேட்டு ''ஆ ராமா!'' என்று அலறி மயங்கி விழுகிறார்கள். அவர்களால் பாசமுடன் வளர்க்கப்படும் பச்சைக்கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும் கூட இராமர் பிரிவை எண்ணிக் கலங்கிக் கதறுகின்றன. பூனைகளும், பசுக்களும், அதன் இளைய கன்றுகளும் கூட இராமர் பிரிவை எண்ணி அழுகின்றன எனறு பாடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''கிள்ளையோடு பூவை அழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை அழுத உணர்வறியாப்
பிள்ளை அழுத பெரியோரை என்சொல்ல
வள்ளல் வனம் புகுவான் என்றுரைத்த மாற்றத்
தால்''

''ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புனற் புள்ளழுத கள்ளொழுகும்
காவும் அழுத களிறழுத கால்வயப் போர்
மாவும் அழுதன அம்மன்னவனை மானவே''

அயோத்தியில் இருக்கும் யானைகள், குதிரைகள், நீர்வாழ்ப்பறவைகள் முதலான பல்லுயிரினங்களும் அழுவதோடு தாவரங்களும் மலர்களும் கூட இராமர் பிரிவால் அழுகின்றன எனறு அயோத்தியே சோகமயமானதைக் காட்டுகிறார் கம்பர்.

தசரதரைப் போலவே அயோத்தியில் உள்ள எல்லோரும், எல்லாமும் அழுகின்றன என்று பாடும் கம்பர் ''அழுதன அம்மன்னவனை மானவே'' என்ற தொடரால் இராமர் வனவாசத்திற்குக் காரணம் கைகேயியும், கூனியுமே என்ற உண்மையை மக்கள் அறிந்துகொண்டுவிடுகிறார்கள் என்ற உண்மையை நமக்குத் தெளிவுபடுத்துகிறார். அவ்வாறு புரிந்து கொள்ளும் மக்கள் ''கைகேயியும் கொடிய கூனியும்அல்லாற் கொடியார் பிறருளரோ'' என்று அவ்விருவரையும் தூற்றிப் பழிக்கின்றார்கள்.



''இராமர் பட்டாபிசேகத்தை நிகழவிடாமல் இவ்விரு கொடியோர் தடுத்துவிட்டார்களே! இதற்கு நம் கண்கள் செய்த பாவம் காரணமா? மண்மகளும், திருமகளும் கூட பாவம் செய்திருப்பார்களா? அதனால்தான் இப்படிப் பட்டாபிசேகம் தடைபட்டுப் போனதா?'' என்று தங்கள் நல்லூழ் இன்மையையும் மக்கள் நொந்து கொள்கிறார்கள்.

''கைகேயியைப் போல அவள் ஈன்ற பரதன் கொடியவன் அல்லன்; தாயே கொடுத்தாலும் அவன் இராமனுக்குரிய அரசைத் தான் ஏற்று ஆளமாட்டான்'' என்று பரதனின் பண்புநலனைக் கூறிப் பலரும், ''பரதன் இனித் திரும்பக் கொடுத்தாலும், பதினான்காண்டுக் கால வனவாசம் முடியாமல் இராமர் அயோத்தி திரும்பமாட்டார்'' என்று இராமர் மன உறுதியைப் பலருப், ''இராமருடன் நாமும் காட்டிற்குப் போவோம். காடே இனி நமக்கு அயோத்தி'' என்பதாகப் பலரும் ''இராமர் இதற்கு இசைவாரோ மாட்டாரோ! இராமர் இசையாவிட்டால் தீ மூட்டி மாண்டுவிடுவோம்'' என்பதாகப் பலரும் தங்கள் தங்கள் மனக் கலக்கத்தை வெளிப்படுத்துகிறார்கள். ''இராமர் வனம் போவதை எண்ணிக் கோசலை எப்படித் துடிப்பாளோ? இலக்குவன் எப்படித் துடிப்பானோ'' என்றெல்லாம் எண்ணும்போது மக்களுடைய துயரம் நெய் சொரிந்த தீ போல மிகுதியாகிறது. அவர்கள் பெருக்கும் கண்ணீரும் ஆறெனப் பெருகி ஓடுகிறது.

''ஐயா இளங்கோவே ஆற்றுதியோ நீ'' என்று மக்கள் அரற்றும் அதே நேரத்தில் இலக்குவனும் இராமர் வனம்புகுவான் என்ற கொடிய சேதி கேட்டு, ஊழியின் இறுதியில் உலகைப் பொசுக்க எழும் தீ போலப் பொங்கி எழுகிறான். ஆதிசேடனின் அம்சமான இலக்குவன், தான் கொள்ளும் கோபாவேசத்தால் உண்மையில் ஆதிசேடனே ஆகிவிடுகிறான். அவன் கண்களில் கனல் பறக்கிறது. கோபத்தால் நெற்றி சுருங்குகிறது. முகத்தில் வேர்வை முத்துமுத்தாகத் தோன்றத் தன் கடகம் அணிந்த கைகளிரண்டையும் கொட்டிச் ''சிங்கக் குட்டிக்கு உரிமையான தீஞ்சுவை ஊனை நாய்க் குட்டிக்கு ஊட்ட நினைக்கிறாளா கைகேயி? இது நன்று நன்று'' என்று கேலி நகையும் புரிகிறான் இலக்குவன். தன் அரையில் உடைவாளை எடுத்துக் கட்டி, மார்பில் கவசத்தைப் பூட்டி, அம்பறாத் தூணியை முதுகில் கட்டி, வில்லையும் இடக்கையில் ஏந்தி இலக்குவன்போருக்கும் தயாராகி விடுகிறான்.

''என் இராமன் முடிசூடுவதற்குத் தடையாக நிற்பவர் எவராயினும் அவர்களைக் கொன்றொழித்துப் பகையைப் பந்தாடி, நான் இராமனுக்கு முடிசூட்டப் போகிறேன். தேவர்கள், வித்தியாதரர்கள், நாகர்கள் முதலாக யாவராயினும் எதிர்ப்பவர்கள் என் முன்னால் வரட்டும்.உலகைப் படைக்கவும், காக்கவும் அழிக்கவும் வல்ல மும்மூர்த்திகளே யானாலும் என் முன்னால் வரட்டும். ஒரு பெண் கொண்ட எண்ணம் நிறைவேற ஒருக்காலும் நான் அனுமதிக்கமாட்டேன்'' என்று வீரமுழக்கம் செய்தவாறு தன் வில்லின் நாணை மீட்டுகிறான் இலக்குவன். அவ்வாறு இலக்குவன் மீட்ட உண்டாகும் வில்லின் நாணொலி இடியொலியாக எங்கும் தொடர்ந்து ஒலிக்க, அவ்வொலி கேட்கும் மக்கள் இது உலகம் அழியும் ஊழிக்காலத்து உண்டாகும் இடியோசையோ என்று அஞ்சிக் கலங்குகிறார்கள்.

சுமித்திரையின் மாளிகையில் இருக்கும் இராமரும் அவ்வொலியைக் கேட்கிறார். இது இலக்குவனின் வில் நாணொலி என உணர்ந்து, கோபமாய் இருக்கும் இலக்குவனைத் தேற்றி அமைதிப்படுத்த கார்மேகமாய் இலக்குவன் மாளிகைக்கு விரைந்து வருகிறார். ''என் ஐயனே! இப்படி நீ கோபமாக இருந்து நான் ஒருநாளும் பார்த்ததில்லலயே! யார் மீது உனக்கு என்ன கோபம்? ஏன் தனுவேந்திப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறாய்'' என்று இராமர் நயமாக இலக்குவனை வினவுகிறார். ''சத்தியத்தைக் கெடுத்து, அரச தர்மத்தைச் சிதைக்கும் மைபோல் மனம் கறுத்த கைகேயியின் கண் முன்னால் உனக்கு நான் மகுடம் சூட்டப் போகிறேன். தேவரேயானாலும், இதைத் தடுப்பவர்கள் என் எதிரில் வரட்டும். அவர்களை எல்லாம் கொன்று ஈரேழு பதினான்கு லோகங்களையும் நான் உனக்கு உரிமையாக்குகிறேன்'' என்று முழங்குகிறான் இலக்குவன்.

''தம்பி! என்றும் நீதி நேர்மையோடே பேசவும் செயல்படவும் கூடிய உனக்கு இன்று என்ன வந்தது? ஏன் இப்படி முறையற்ற முறையில் பேசுகிறாய்?'' என்று இராமர் வினவுகிறார். ''என் கண் முன்னால் இந்த அரசுரிமை உனக்கே உரியதென்று நம் தந்தை சொன்னார். அவரே நீதியும் நேர்மையும் மாறிப் போனார். உன்பால் அன்பில்லாதவர்கள், தாம் வரம் பெற்று உன்னை இப்போது பெருங்காட்டிற்குப் போகக் கூறும் புன்மையைக் கண்டும் என்னால் எப்படி அமைதியாக இருக்க முடியும்? முன்பு கூறியபடி உனக்கு மணிமகுடம் அவர்களே சூட்டட்டும், இல்லாவிட்டால் நான் சூட்டுகிறேன். இம்முயற்சியில் நான் என் உயிரே போனாலும் பின்வாங்கிடமாட்டேன்''.

தசரதர் மீதும், கைகேயி மீதும் குற்றங்களைச் சுமத்தி இலக்குவன் சீறுகிறான். நடந்த செயல்களுக்குத் தந்தை, தாயைக் குற்றம் கூறுவது முறையன்று என்பதை மிகநயமாக இராமர் இலக்



# ஒப்பில்லாத ஒன்பது

## இ. பரந்தாமன்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பில்லாத அப்பன் | ஒப்பிலியப்பன் | ஒப்பிலியப்பன் |
| 2. | ஒப்பில்லாத ஆழ்வார் | பெரியாழ்வார் | உண்டோ பெரியாழ்வாருக்கு ஒப்பொருவர் |
| 3. | ஒப்பில்லாத ஆசாரியன் | சடகோபர் எனும் நம்மாழ்வார் | உண்டோ சடகோபருக்கு ஒப்பொருவர் |
| 4. | ஒப்பில்லாத கலை | திருப்பல்லாண்டு | உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலை |
| 5. | ஒப்பில்லாத நூல் | திருவாய்மொழி | உண்டோ திருவாய் மொழிக்கு ஒப்பு |
| 6. | ஒப்பில்லாத ஊர் | தென்குருகூர் (ஆழ்வார் திருநகரி) | தென்குருகைக்கு உண்டோ ஒரு பார் தன்னில் ஒக்கும் ஓர் ஊர் |
| 7. | ஒப்பில்லாத நாள் | வைகாசி மாதம் விசாக நன்னாள். நம்மாழ்வார் பிறந்த நன்னாள் | உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொரு நாள். |
| 8. | ஒப்பில்லாத நாட்கள் | 1. ஐப்பசி மாதத்தில் ஓண நன்னாள். பொய்கை யார் பிறந்த நாள்<br>2. ஐப்பசி மாதம் அவிட்ட நன்னாள். பூதத்தார் பிறந்த நாள்<br>3. ஐப்பசி மாதம் சதய நன்னாள் பேயாழ்வார் பிறந்த நாள் | ''ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயமிவை ஒப்பி லவர் நாட்கள்'' |
| 9. | ஒப்பில்லாத ஞானியார் | பெரியாழ்வார் அவதரித்த சோதி நாளை ஆதரிப்பவர் | ஆனிதல்லில் சோதியென்றால் ஆதரிக்கும் ஞானியார்க்கு ஒப்போர் இல்லை இவ்வுலகில். |

—சான்று: உபதேச ரத்தினமாலை

குவனுக்கு எடுத்துரைக்கிறார். ''அரசை ஏற்றுக் கொள் எனறு சக்கரவர்த்தி என்னிடம் கூறிய போது, பிறரும் அரசுரிமையைக் கோரக்கூடும் என்று தந்தை எண்ணியிருக்க முடியாது. ஆகவே இதில் அவர் குற்றம் ஒன்றும் இல்லை. சக்கரவர்த்தி உறுதிகூறியிருந்த இருவரங்களை இப்போது கேட்டுப் பெற அன்னையும் உரிமை படைத்தவரே. ஆகவே அவர் மீதும் குற்றம் இல்லை. நதியில் நீர் இல்லாமல் போனால் அதற்கு நதியையா நாம் குற்றம் கூற முடியும்? இன்று நடைபெறும் இந் நிகழ்ச்சிகளுக்குத் தந்தையைக் குற்றம் கூறுவதோ, அன்றித் தாயைக் குற்றம் கூறுவதோ, அன்றி பரதனைக் குற்றம் கூறுவதோ சரியன்று., இதற்கெல்லாம் காரணம் விதி. அதை உணராமல் நீ கொள்ளும் கோபம் முறையன்று.

''நதியின் பிழையன்று நறும்புனலின்மை அற்றே
பதியின் பிழையன்று, பயந்துநமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன்பிழையன்று, மைந்த
விதியின் பிழை, நீஇதற்கென்னை வெகுண்ட
தென்றான்''

விதிக்கு நாயகரான இராமரே ''இது விதி'' என்று உணர்த்தவும் கூட இலக்குவன் இராமர் வாக்கை ஏற்றுக் கொள்ளாமல் ''விதியை நான் மாற்றுகிறேன். விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண் நீ'' என்று வீரமே பேசுகிறான். ''இலக்குவனா! நல்ல நீதிகளைக் கற்று, கற்ற நீதிவழி நிற்கக் கூடிய நீ இவ்வாறு நம் பெற்றோரை நிந்தை கூறிப் பழிக்கக்கூடாது'' என்று இராமர் வற்புறுத்திக் கூற இப்போதும் இலக்குவன் ''எனக்கு நீயே தந்தையும் தாயும். எனக்கு ஒப்பற்ற கடவுளும் நீ. ஆகவே தசரதரும், கைகேயியும் எனக்குத் தந்தையும் தாயும் ஆகார். அவர்களை நிந்தையாகப் பேசுவதில் தவறில்லை'' என்று கூறுகிறான். இலக்குவன் வார்த்தையைக் கொண்டே அவனை இராமர் இப்போது மடக்குகிறார். ''நானே உனக்குத் தந்தையும் தாயும் என்று நீ எண்ணுவது உண்மையானால், என் வார்த்தையைக் கேள். நம் தந்தையிடம் நாட்டை வரமாகப் பெற்று அதனைக் கைகேயி பரதனுக்குரிய செல்வமாகத் தருகின்றார். நான் இப்போது பெற்றிருக்கும் செல்வம் தவம். தவத்தைவிட சிறந்த செல்வம் எனக்கு இனி வேறு எதுவும் இல்லை. ஆகவே நீ கோபத்தை விடு. சாந்தம் கொள். இது என் கட்டளை'' எனறு இராமர் கூற அவரையே தாயும் தந்தையுமாய்த் தனிப் பெரும் தெய்வமுமாய் உளமாரப் போற்றிடும இலக்குவன், அலைகள் ஆர்ப்பரிக்கும் கடல், கரை மீறாமல் அதன் எல்லைக்குள் அடங்கி நின்று விடுவதைப் போலவே தானும் தன சீற்றம் தணிந்து அடங்கி நிற்கின்றான்.

தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அடங்கி நிற்கும் இலக்குவனை இராமர் தன் உடலுடன் உடலாக இறுகக் கட்டித் தழுவிக் கொள்கிறார். இருவருமாகச் சுமித்திரையின் மாளிகைக்கு வருகிறார்கள். மக்கள் இருவரும் வரும் நிலை கண்டும், அவர்கள் இனி செய்யவிருக்கும் செயல் எண்ணியும்

சுமித்திரை சொல்லொணாத் துயருக்கு ஆளாகித் தரையில் புரண்டு உருளுகிறாள். இராமர் ஓடி வந்து அவரைத் தம் இருகைகளாலும் ஏந்திச் சமா தானப்படுத்துகிறார். ''அம்மா! தந்தையைப் பொய்யனாக்க என்னால் இயலாது; ஆகவே தான் வனத்திற்குப் புறப்படுகிறேன். விரைவில் நான் திரும்பிவிடுவேன். நான் காட்டிற்குச் சென்றாலும் கடலுக்குள் புகுந்தாலும், வானகமே சென்றாலும் அவை எனக்கு அயோத்திபோல் இன்பத்தையே அளிக்கும். எனக்குத் துன்பம் உண்டாக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் எங்கும் எவரும் இல்லை. ஆகவே வருந்தாமல் எனக்கு விடை தாருங்கள்''.

சுமித்திரையின் இசைவைவேண்டி இராமர் இவ்வாறு அவரைத்தேற்றி இருக்கும் வேளையில் கைகேயியின் பணிப்பெண்கள் அங்கு வருகிறார்கள். தசரதரின் மயக்கம் தெளிவதற்கு முன்பே இராம ரைக் காட்டிற்கு அனுப்பிவிடவேண்டும் என்பது கைகேயியின் துடிப்பு. அதனால் தன் கணவ வரின் இதயத் துடிப்பு நின்று போய் விடுமே என்ற கவலை ஒரு சிறிதும் இல்லாமல் நஞ்சுமனம் கொண்ட கைகேயி, தன் பணிப்பெண் களிடம் இராமர் காட்டிற்குப் புறப்பட மரவுரி களைத் தந்து அனுப்புகின்றாள். அப்பணிப்பெண் களும் தம் தலைவ்யின் உத்திரவை மீறமுடியாமல் அதே நேரம் இராமரைப் பிரிய மனமும் இல்லாத வர்களாய்க் கண்ணீர் வடித்த கோலமாய் உயிர் பதைக்க வருகிறார்கள். ''கைகேயி அனுப்பிய மர வுரிகள் வந்துள்ளன'' எனறு கூறி இனி இந்தத திருமுகத்தை என்று காண்போமோ என்ற ஏக்கத்து டன் இராமரை வணங்கித் தொழுகிறார்கள்.

கைகேயியின் மரவுரிகளைக் காண்பதும், இலக்குவனின் துயரமும் எல்லையற்றதாகிவ்டு கிறது. ''மகுடம் இழக்கச் செய்தவர் மரவுரியும் தந்து அனுப்பியிருக்கிறார். அவர் எதைக் கொடுத் தாலும் தடையின்றிப் பெற்றுக் கொள்ளப் பிறந்த தமையன் இதோ இருக்கின்றான். என் கையில் வில் லிருந்து என்ன பயன்? நிகழ்வதை வீணே காணத் தானே நான் இருக்கின்றேன். அதைக் கொடுங்கள்' என்று மரவுரிகளைப் பெற்றுக் கொள்கிறான் இலக் குவன். ''அன்னையே! இராமருடன் வனம் செல்ல எனக்கு அனுமதி தாருங்கள்'' என்று கூறிச் சுமத் திரையின் தாள் தொட்டுத் தொழுகிறான் இலக்கு வன். ''மகனே இனிமேல் உனக்கு வனமே அயோத்தி. இராமனே தந்தை. சீதையே, கோச லையும் நானும் போல உனக்குத் தாய். தம்பி என்ற உரிமையோடு செல்லாதே. இராமன்பின்னே சென்று ஒரு பணியாளனாக இரு. இராமன் மீண்டும் அயோத்திக்குத் திரும்பி வந்தால் நீயும் வா., இரா மன் வராவிட்டால் இராமனுக்கு முன்னே நீ மடிந்துவிடு'' இவ்வாறு இலக்குவனுக்கு ஆணை யிடும் சுமத்திரை பாசமிகுதியால் தனங்களில் பாலும், கண்களில் நீரும் சோர உருகி நிற்கின்றார்.

''ஆகாதது அன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம்மன்னவன், வையம்ஈந்தும்
போகாவுயிர்த் தாயர் நம் பூங்குழல் சீதைஎன்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள்''

''பின்னும்பகர்வாள் மகனே இவன் பின் செல், தம்பி
என்றும் படியன்று, அடியாரினும் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே அவன் வந்திடின்வா, அன்றேல்
முன்னம் முடி என்றனள் பால் முலைசோர நின்றாள்''




## திருமயிலைத் திருத்தலம் இலக்கிய வரலாற்றுப் பார்வை

நூலாசிரியர்: டாக்டர் சு. இராஜசேகரன்.

நூல் வேண்டுவோர் நாடவேண்டிய முகவரி: ராஜலட்சுமிப் பதிப்பகம், 47, சடையப்ப முதலித் தெரு, சைதாப்பேட்டை சென்னை-600 015.

பக்கங்கள்: 400. விலை ரூ.60

நந்தனம் அரசினர் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் சு.இராஜ சேகரன் தம் டாக்டர் பட்டத்திற்கு மேற்கொண்ட விரிவான ஆய்வே மேற்கண்ட நூலாகும்.

திருமயிலையைப் பற்றிய நூற்றுக்கும் மேற் பட்ட இலக்கியங்களைத் தொகுத்துச் சுட்டுவதும் திருமயிலையில் உள்ள ஆலயங்களைப் பிள்ளையார் ஆலயங்கள், சிவாலயங்கள், பெருமாள் ஆலயங் கள், அம்மன் ஆலயங்கள் என வகுத்து விவரிப் பதும் இந்நூலின் தனிச் சிறப்பாகும். திருமயிலை யைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தாங்கி வரும் அற்புத பேழையாகத் திகழ்கிறது இவ்வாய்வு நூல்.

திருமயிலையின் தனிச் சிறப்புகள் என ஆசிரி யர் திருவள்ளுவர் திருவடிகள் போற்றப்படும் இடம், பேயாழ்வார் பிறந்த இடம், அங்கம் பூம் பாவையான இடம், வாயிலார் நாயனார் முக்தி அடைந்த இடம், சமயங்களின் வளர்ப்புப் பண் ணையாக உள்ள இடம், இராமகிருட்டிண மடம் உள்ள இடம், சித்திரச் சத்திரம் விளங்கும் இடம் அறுபத்துமூவர் திருவிழாவும், தண்ணீர்ப்பந்தல் தருமமும் நடைபெறும் இடம், அழகிய கடற் கரை உள்ள இடம், கலங்கரை விளக்கம் ஒளி விடும் இடம் என பலவற்றைச் சுட்டி அவற்றை விவரித்திருக்கும் சிறப்பு பாராட்டிற்குரியதாக உள்ளது.

பலரும் படித்துப் பயன்பெற வேண்டிய சிறப் பான ஆய்வு நூல் இந்நூல்.

—நிறைமதி



# கடமை உணர்வுடன் பணியாற்றிடுவீர்!

**அறநிலையத் துறையானது கடவுள் சம்பந்தப்பட்ட துறை. அறநிலையத் துறை அலுவலர்கள் அனைவரும் கடமை உணர்வுடன் பணியாற்ற சபதம் மேற்கொள்ள வேண்டும்.**

—அறநிலையத்துறை அமைச்சர்
மாண்புமிகு **கே.பி. கந்தசாமி, எம்.ஏ.,** அவர்கள்

---

இலக்குவனையும் தம்முடன் வரச் சுமத்திரை ஆணை பிறப்பிக்கக் கண்டு இராமர் மனம கலங்கு கின்றார். ''இலக்குவனா! என்னைப் பிரிவதால் தாயரும், தந்தையும் மிக வருந்துவார்கள். அவர்கள் வருத்தம் தணிக்க நீ இங்கேயே இரு'' என்று இராமர் கூறக் கேட்டு இடிந்து போய்விடுகிறான் இலக்குவன். ''அண்ணா! நான் என்ன தவறு செய்தேன் என்று இப்படித் தண்டிக்கிறாய். உன்னைக் காட்டுக்குப்போ என்று கூறக்கேட்டும் உயிரோடு இன்னும் இருக்கின்றேன் எனபதனாலா இக்கொடிய வார்த்தையைக் கூறுகிறாய்! நீரின்றி மீன் உயிர் வாழுமா? நீ இன்றி நான் உயிர் வாழ்வேனா? நான் உயிருடன் இருப்பது உனக்கு விருப்பம் இல்லையானால் கூறு. இப்போதே இங்கேயே உன் திருவடிகளிலேயே நான் என் உயிரை விட்டு விடுகிறேன்'' என்றுகூறி இலக்குவன் சொல்லமுடியாத வேதனையில் கண்ணீர் வடிக்க, இராமரால் இலக்குவனை மறுத்து ஒன்றும் பேச முடியவில்லல. பிறகு, இருவரும் தத்தம் அரசகுமாரர்களுக்குரிய ஆடைகளைக் களைந்து மரவுரிகளை உடுத்துக் கொள்கிறார்கள்.

''வனம் போகாமல் இராமரைத் தடுப்பேன்'' என்று தசரதரிடம் உறுதி கூறி வந்த வசிட்ட முனிவர் சுமித்திரையின் மாளிகைக்கு இப்போது தான் வருகிறார். வனம் செல்லச் சித்தமாய் இராம, லக்குவனர்கள் மரவுரிக் கோலமாய் நிற்கக் கண்டு அம் மாமுனிவரே மனம் கலங்கிக் கண்ணீர் வடிக்கிறார். ''இராமரின் இக்கோலத்திற்குக் கைகேயி தானே காரணம்'' என்று அம்முனிவர் எண்ண ''புண்ணிய மூர்த்தியாகிய இராமர் வனம் போவதற்கு உண்மையான காரணமாகக் கைகேயி இருக்க முடியாது. அதற்குக் காரணம் இராவண வதமாகிய வேறொன்று, அதை உலகம் புரிந்து கொள்ளும் காலமும் பிறகு வரும்'' என்ற தெளிவும் அவருக்கு உண்டாகிறது.

எனினும் தசரதரிடம் தாம் கூறிவந்த உறுதிக் கேற்ப இராமர் வனவாசத்தைத் தடுத்து நிறுத்தவே அவர் முயல்கிறார். ''இராமா! நீ கானகம் செனறால் உன் தந்தை தசரதர் வானகம் சென்று விடுவாரே'' என்று வசிட்டர் கூறுகிறார். அதற்குப் பாம்பணையில் பள்ளி கொள்ளுதலை விட்டுப் பூமிக்கு வந்திருப்பவரான இராமபிரான் ''என் பணி அரசர் ஆணையை நிறைவேற்றுவது, உங்கள் பணி அரசர் துனபத்தை மாற்ற வேண்டியது'' என்று கூறுகிறார். ''இராமா! வனம் போ! என்று உன்னை மன்னர் தம் வாயால் பணிக்கவில்லையே! அவ்வாறு பணித்தவள் கைகேயிதானே!'' என்றும் வசிட்டர் கூறிப் பார்க்கிறார். ''தந்தை இசைந்ததனால் தானே தாய் என்னை ஏவினார். நானும் அன்னை கட்டளையை என் சிரமேற் கொண்டேன். எல்லாம் அறிந்த நீர் தடுக்கலாமா?'' என்று இராமர் வினவ, வசிட்டரும் இராமருக்கு மாறாக ஒன்றும் கூறாமல் நின்று விடுகிறார். வசிட்டரைத் தொழுது கானகம் செல்ல விடை பெற்றுப் புறப்படுகிறார் இராமர்.


விதியை விதிப்பவனான பிரமனே விழைந்தாலும் விதியை வெல்ல ஆகாது. முடிபுனைய குறிக்கப்பட்ட மங்களவேளையில் இராம லக்குவனர் மரவுரி புனைந்துக் காட்டிற்குக் புறப்பட நேர்ந்த இந்த விந்தையைக் காட்டும் கம்பர், விதியை வெல்ல யாராலே ஆகும்? என்றும் வினவுகிறார்.

''வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள்
தாழ்வினை அதுவரச் சீரைச் சாற்றினான்
சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?''

—தொடரும்

---

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






மயிலை அருள்மிகு திருவள்ளுவர் ஆலயத்தில் திருவள்ளுவர் திருநாள்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் இவ்விழாவில் சிறப்புரை ஆற்றினார். மயிலை சட்டமன்ற உறுப்பினர் திரு. ந. கணபதி பி.ஏ. பி.எல்., சென்னை துணை ஆணையாளர் திரு. கு. சிதம்பரம் பி.ஏ., மற்றும் தமிழ்ப் பேரறிஞர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.



திருவள்ளுவர் திருநாள் 15.1.90 அன்று காலை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்தபோது எடுக்கப்பட்ட படம். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க் குடிமகன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உடன் உள்ளனர்.